உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர

ஆதீனத்தைச் சேர்ந்த

ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

திருவாரூர் நான்மணிமாலை

(மூலமும்)

சென்னை

திருவாளர். ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள்

(எழுதிய வசனமும்)

இஃது

இவ்வாதீன 24-வது

அருட்குரவராக எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகளின்

திருவுளப்பாங்கின்படி,

இவ்வாதீனத்துக்குச் சொந்தமான

திருவாரூர்

(ஸ்ரீ தியகாராஜ சுவாமி தேவஸ்தானம்)

இராஜாங்கக்கட்டளை கட்டளை விசாரணை

ஸ்ரீ முத்துகுமாரஸ்வாமி தம்பிரான் அவர்களால்

வெளியிடப்பெற்றது.

1943

[விலை ரூ. 0—2—0

திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

௨௪-வது மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசார்ய சுவாமிகள்

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுரம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் நான்மணிமாலை

முன்னுரை

ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரந் தோளுடை யானும்
ஆயிர ஞாயிறு போலும் ஆயிர நீண்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானு மாரூ ரமர்ந்தவம் மானே.

—திருநாவுக்கரசர்.

வீட்டின்பத்தையே நாடும் விழுமியோர்கள் பாட்டுக்கள் வாயிலாக இறைவனை யேத்துவர் எனும் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளுரைக்கிணங்க, திருமுறை யாசிரியர்களுக்குப் பின்னர் அவ்வக்காலத்துத் தோன்றிய அருந்தவச் சீலர்கள், பலராலும் புகழப்படும் அருட்பிரபந்தங்கள் பலவற்றை யருளினர். அவருள் தலையாயவர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளாவார். இம் முனிவரது திருவாக்கு செந்தமிழுலகம் போற்றுந்தகையது. மகாவித்துவான் யாழ்ப்பாணம் வடகோவை சபாபதி நாவலரவர்கள் தாம் இயற்றிய திராவிடப் பிரகாசிகையில் பிரபந்தங்களைப்பற்றிய அரிய பகுதியில் "இவற்றுள் குமரகுருபர முனிவர் பிரபந்தங்களும், சிவஞானயோகிகள் பிரபந்தங்களும் வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்த நுண்பொருள் விளங்குங் கொழிதமிழ்க் கவிகளுடையன" எனப் பாராட்டியுள்ளனர். பண்டைய சங்கநூற்கள் சொற்றெருகுதியும், இடைக்காலத்தே விளங்கிய உரையாசிரியர் விளக்கங்களும், தமிழ் வளர்ச்சிக் குரிய முறைகளும் இவர் நூல்களில் நன்கு புலனுகும்.

முனிவரருளிய பதினைந்து பிரபந்தங்களுள் திருவாரூர் நான்மணிமாலை எனும் நூல் ஒன்ருகும். இஃது அந்தாதித் தொடையால் வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா எனும் நால்வகைப் பாக்களால் ஆக்கப்பட்டது. பொருட் சுவையும், சொற்சுவையும் நிறைந்துள்ளது. சிவபெருமான்

சடைமுடி தினைப்புனமாகவும் (26), கிழக்கொல்லன்தொழில் நிலையமாகவும் (38) உருவகமாக்கியது கற்போர் மனத்திற்கு மகிழ்ச்சிதரும். வேதத்திற்கு மறை என்று பெயர் அமைந்த பொருத்தமும் (20), இறைவன் எச்சமயத்தார்க்கும் பொது என்று காட்டிய பொருத்தமும் (22) அறிவுடையோர் அதிசயிக்கத்தக்கன. இறைவன் பேரருளாளன் என்றுணர்த்தும் முறைமையும் (36), பாசக்கட்டால் பிறவித்துன்பம் அனுபவிக்கும் உயிர்களது துயரநிலையை பாசம் பதியினையணுகாப் பான்மையால், இறைவன் அறியமாட்டார் என்று முடிக்கும் முறைமையும் (16) யாவரும் போற்றத்தக்கதேயாம். நகைச்சுவைபட சிவபெருமான் தன்னருகில் மயில்போன்ற உமையம்மை யிருக்கும் துணிவால் புற்றிலிடங்கொண்டா ரென்றும், சர்ப்பாபரண மணிந்தா ரென்றும், கொடியவிட முண்டா ரென்றும் (34) கூறியது கற்றோரை யின்புறச்செய்யும். இவையன்றி இயற்கை வனப்புக்கள் சோலைகளிலும், மகளிராடல்களிலும் முனிவர் சிறப்புற வமைத்துள்ளனர்.

இவ்வரும் மேன்மைகளையுடைய நூல் செய்யுள் வடிவத்திலுளதாதலினால் தமிழ்ப் புலமையுடையோரே யன்றி யேனையோர் அரும் பொருள்களை யறியமாட்டாராகலான் உரைநடை யாவர்க்கும் பயன்படும் என்று திருக்கயிலாயபரம்பரைத் தருமபுரவாதீனத்து 24-வது பட்டத்தமர்ந்து அருட் செங்கோல் செலுத்துகின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் திருவுளம்பற்றினார்கள். அவர்கள் வேதநெறி, சைவநெறியாகிய இரண்டும் சீர்பெற நின்று விளங்கச் செய்யும் பணிகள்பல. திருக்கோயிற்றிருப்பணிகளாலும், திருவிழாச் சிறப்புக்களாலும், வேதசிவாகமதேவார பாடசாலைகளில் மாணவர்களைப் பயிற்றுவிப்பதோடு சிவபுராணங்கள் சைவ சித்தாந்த நூல்கள் ஆகிய இவைகளின் நுண்பொருள்களை விரிவுரைகளால் யாண்டும் விளக்குவித்தலாலும், உலகியல் நூல்களும் சமயசாத்திர நூல்களும் ஆக்குவித்துப் பரப்புவதாலும் அவர்கள் பெருமை சைவவுலகம் நன்கு அறிந்ததே. அம்மாண்புடையார் அடியேனையும் பொருளாகக் கொண்டு இவ்வுரைநடையினை எழுதித்தருக என ஆணைதந்தனர். அவ்வருளாணையே இந்நூலை ஆக்குவதற்குக் காரணமாக நின்றது. இதனை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சிவஞானவொளியையாண்டும் அச்சுப்பிரதிநூல்கள் வாயிலாகப் பரவச்

செய்யக்கருதி யமைத்த, தங்களது ஞானசம்பந்த வச்சகத்தில் மிக வழகாக அச்சிட்டுச் சைவவுலகத்திற்கு வழங்கியுள்ளனர். என்னை யீர்த்தாட்கொண்டு இப்பணியைச் செய்யுமாறு அருளிய இவ்வருந்தவப் பெருந்தகையாருக்குப் பன்முறையும் வணக்கம் செய்து நன்றி செலுத்தும் கடமைப் பாட்டினை யுடையேன். சைவவுலகம் இந்நூலின் அரும்பொருள்களைக்கண்டு மகிழ்க. நிரந்தரமான அன்பு இறைவன்பால் பெருகுக.

திருவொற்றியூர்,
12—5—43.

ரா. சண்முகசுந்தரன்.

ஸ்ரீ குமரகுருபரமுனிவர் அருளிய நூல்கள் :—

1. கந்தர்கலிவெண்பா.
2. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.
3. மீனாட்சியம்மை குறம்.
4. மீனாட்சியம்மை யிரட்டைமணிமாலை.
5. மதுரைக்கலம்பகம்.
6. நீதிநெறி விளக்கம்.
7. திருவாரூர் நான்மணிமாலை.
8. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.
9. சிதம்பரம் மும்மணிக்கோவை.
10. சிதம்பரச் செய்யுட்கோவை.
11. சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை.
12. பண்டார மும்மணிக்கோவை.
13. காசிக்கலம்பகம்.
14. சகலகலாவல்லிமாலை.
15. கைலைக்கலம்பகம்.

உ
சிவமயம்

செந்தமிழ்ப்புரவலர் கோவைகிழார்

எழுதிய

மதிப்புரை

திருவாரூர் நான்மணிமாலை எனும் சிறந்த பிரபந்தத்தை உரைநடையாக எழுதி வெளியிடவேண்டும் என்று தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானம் அவர்கள் கருதியது மிகவும் போற்றத்தக்கதே. இந்த நான்மணிமாலை சிறந்த கருத்துக்களைக் கொண்ட ஒரு அரியநூல். படிப்பில் அதிகமாகத் தேராதார் அதன் ஆழ்ந்த கருத்துக்களை அறிவதரிது. உரை நடையாக இருக்குமாகில் அதன் அரிய பெரிய கருத்துக்களை எளிதில் அறிந்துகொள்ளலாம். ஆகவே அதனை உரைநடையில் எழுதச் செய்து அச்சில்வெளியிட ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானம் எண்ணியது நமது மக்கள் செய்த பெரும் பாக்கியமாகும்.

இவ்வுரைநடைநூல் எழுதியவர் தமிழன்னையின் சிறந்த மகனும், சைவசித்தாந்த நூல்களைத் தெளிவாகக்கற்று, ஐயமற வுணர்ந்தவரும், எவரும் அறியும்வண்ணம் அவைகளை எடுத்துரைக்க வல்லுநருமான திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் ஆவர். அவர்கள் இந்த உரைநடையில் ஆண்டிருக்கும் முறை சிறந்ததாகும். ஒவ்வொரு செய்யுளுக்கும் தெளிவான பொழிப்புரை தந்திருக்கிறார்கள். பாட்டிலுள்ள வருணனைகளை விவரமாக எடுத்துக்காட்டியுள்ளார்கள். அணிவகைகளை யாவர் உள்ளத்திலும் ஊன்றிநிற்கும்வண்ணம் அழகாக எடுத்து உரைத்திருக்கிறார்கள். முக்கியமான இடங்களில் துறைகளும் விளக்கப்பட்டுள்ளன. ஆகவே இம்முறை மிகச் சிறந்ததேயாகும்.

இந்நூலால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பயன்பெறக் கூடும். அவர்கள் பொழிப்புரை எழுதுவதற்கு இவ்வுரை நடையை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக வைத்துக்கொள்ளலாம். அணிகளை விரித்து எழுதுவதற்கு இந்நடை பயன்படலாம். வருணனைகளை வைத்துக் கொண்டு இது என்ன அணி என்று வினாக்களை எழுப்பி அவர்களே விடைகளை உணர்ந்து சொல்

லவும் இந்நூல் பயன்படும். இயற்கையாகச் சொல்லக் கூடிய வரலாறுகளில் அணிகளைப் புகுத்திச் சொல்ல வேண்டுமாயின் எவ்வாறு சொல்வது என்பதற்கு இவ் வுரைநடையை ஒரு பாட புத்தகமாகக் கொள்ளலாம்.

இந்நூலாசிரியர் சிறந்த நுணுக்கமான அணிவகைகளை இந்நூலில் ஆண்டிருப்பதனால் இஃதொரு அலங்கார காவியம் எனவும் சொல்லக்கூடும். மேருமலையை ஈசன் வளைக்கவில்லை, வெட்கத்தினால் அது தானே வளைந்த தென்பது எத்துணைச் சிறந்தது (2); குரங்கு பலாப்பழத்தை நகங்களால் கீறி சுளைகள் எடுத்ததை, நரசிங்கம் இரணியனது வயிற்றைக்கீறிக் குடலை எடுத்தற்கு உவமையாக்கினது எத்துணைச்சிறந்தது (4); திருக்கோயில் கமலாலயம் என்ற பேர் பெற்ற காரணத்தைக் கற்பனை செய்து கூறுவது எத்துணைச் சிறந்தது (7); ஈதலும் ஏற்றலும் ஒரு பொருளிடத்துண்டு எனும் அற்புதத்தை இறைவன் திருவுருவத்தி லமைத்துக் கூறுவது எத்துணைச் சிறந்தது (8); இயமனுடைய கொடுந்தொழிலை மீன் வலைஞன் மீன் பிடித்தலுக்கு உவமை கூறி அதிலிருந்து தப்புவிக்க ஈசனுக்கு வணக்கம் கூறுதல் எத்துணைச் சிறந்தது (12); பரம்பொருளின் இலக்கணம் தில்லையம்பலத்தில் அறியும் வண்ணம் திருவாரூரிலும் அப்பெயராலே அறியக் கூடும் என்ற கருத்து எத்துணைப்பொருள் செறிந்தது (22); அகப்பொருளின் மேன்மையை அறியவேண்டுமாயின் சோலையின் கண்ணே இரண்டு மாம்பிஞ்சுகளையும், இளநீர்களையும் காணவில்லை என்று தலைமகன்கூறினதாக வுள்ள பொருட்சுவை யொன்றே அறிதல் போதும் (27); அதனை உரைநடையாசிரியர் தெளிவாக விளக்கிப் புறங்காட்டல், (நாணிக்) கண்புதைக்க வருந்தல் என்ற இரு துறைகளிலும் கொள்ளலாம் எனக் கூறியுள்ளனர். இவ்வாறு அணிவகைகளைச் சிறப்புப்பெறக் கூறும் இந்நூல் தமிழின் அருமையை அறிவதற்குச் சிறந்ததன்றோ! ஆகவே அதனை உரைநடையில் எழுதுவித்து வெளியிட்டதற்காகத் தமிழுலகம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானத்திற்கு மிகவும் கடமைப் பாடுடையதாகுமல்லவா!

கோவை நிலையம்,
தியாகராயநகர்,
சென்னை
12—4—43.

கோவைகிழார்.

உ

சிவமயம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாறு

பதினேழாம் நூற்றாண்டினிடைக்காலத்தே பாண்டி வள நாட்டில் திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ வைகுண்டமெனும் கயிலாசபுரத்தில் சைவவேளாளர் குலத்தில் சண்முகசிகாமணிக் கவிராயரும் அவரது நன்மனைவியார் சிவகாமசுந்தரியம்மையாரும் இல்லறம் இனிது நடாத்தி யொழுகிவந்தனர். அவர்கட்கு மகப்பேறு பன்னா ளில்லாதிருக்கவே திருச்செந்திலாண்டவன் பால் அன்பு பூண்டு கசிந்துருகி வழிபாடுசெய்துவர, அவனது திருவருளால் குமரகுருபர சுவாமிகள் திருவவதாரஞ் செய்தனர். இவருக்குப் பின்னர் குமாரகவிகள் என்பாரும் பிறந்தனர்.

குமரகுருபரர் ஐந்தாண்டுவரையிலும் அழுவதும் பேசுவது மின்றியிருக்க, அவரைப்பெற்றோர் அரிய நோன்புகள் அநுட்டித்தனர். திருச்செந்தில் முருகக்கடவுளின் பெருங்கருணையால் அவர்தம் திருக்கோயில் வழிபாடு செய்யச் சென்றிருந்த காலத்து யாவரும் அதிசயிக்க வாய்திறந்து 'கந்தர்கலிவெண்பா' எனும் அருட்பிரபந்தத்தை யருளினர். பின்னர்த் திருச்செந்தூரில் பல நாள் தங்கியிருந்து முருகனைக் காலந்தோறும் தரிசித்து வருவாராயினர். திருவருள் வேட்கை முதிரவே தமக்கு ஒரு ஞானாசிரியரை உதவவேண்டும் என்று முருகப் பெருமானை வேண்ட ஆண்டவன் 'நீ வடதிசை நோக்கிச் செல்வாயாக. செல்லுகையில் எவரிடம் உன்வாக்குத் தடைப்படுகின்றதோ, அவரையே ஞானாசிரியராகக் கொள்க.' என அசரீரியாக அருளினர். சுவாமிகள் அதனைக் கேட்டதும் மகிழ்ச்சியுற்றுத் தாய் தந்தையரையகன்று வடதிசையாகப்போய்த் திருப்பரங்குன்றம் சேர்ந்தார்.

அங்கிருந்து மதுரையில் திருக்கோயில்கொண்டுள்ள அங்கயற்கண்ணியாகிய மீனாட்சியம்மையார்மீது "மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்" பாடியருளினர். அதன் பெருமையை உலகத்தாருக்கு அறிவிக்க ஓர் அற்புத நிகழ்ச்சியை நிகழ்த்த திருவுளங் கொண்ட இறைவி அக்காலத்தில் மதுரையை ஆண்ட

திருமலை நாயகரது கனவில் ஓர் இளம் பெண்ணாக எழுந்தருளி 'குமரகுருபரன் நம்மீது இயற்றிய பிள்ளைத்தமிழினை அரங்கேற்றுவிப்பாய்' எனப் பணித்தனர். நாயகரும் உடனே விழித்து மகிழ்ச்சியுற்று, அங்கயற்கண்ணம்மையைப் போற்றிப் பணிந்து, தக்க பரிவாரங்களுடன் திருப்பரங்குன்றத்திற்குச் சென்றார். குமரகுருபரமுனிவரைக்கண்டு வணங்கி, அவரையும், அவரது அரிய நூலாகிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழினையும், யானையின்மேலேற்றிவந்து நகர் வலஞ்செய்வித்து மீனாட்சியம்மையார் திருக்கோயிற் சன்னிதியில் அந்நூலை அரங்கேற்றுவித்தார். இந்நூலில் "தொடுக்குங்கடவுட் பழம்பாடல்" எனும் அரும் பாடலைக்கேட்டு மீனாட்சியம்மையார் ஒரு சிறு பெண்வடிவந் தாங்கிப்போந்து, தாம் அணிந்திருந்த முத்துமாலையை முனிவர் கழுத்தில் அணிந்து மறைந்தருளினர். நாயகரும் மிக மகிழ்ச்சியடைந்து பல நிதிகளோடு யானை, குதிரை, சிவிகை, குடை, கொடி முதலிய விருதுகளையுந் தந்தனர். அவர் வேண்டுகோளின் படி மீனாட்சியம்மைகுறம், மீனாட்சியம்மையிரட்டைமணிமாலை, மதுரைக்கலம்பகம், நீதிநெறிவிளக்கம் என்னும் நூல்களை மதுரையிலிருந்தே யியற்றினர்.

சிலநாள் வைகிப் பின்னர்த் திருமலை நாயகரிடத்தில் விடைபெற்று மதுரையினின்றும் நீங்கிப் பல தலங்களை தரிசித்துத் திருவாரூரை யடைந்தார். திருவாரூர்ப் பூங்கோயிலில் தியாகேசரை வணங்கி அவர்மீது திருவாரூர் நான்மணிமாலை எனும் பிரபந்தத்தைப் பாடியருளித் திருவாரூரினின்றும் நீங்கித் தருமபுர மடாலய மடைந்தார். அங்கு அருட்குரவராக எழுந்தருளியிருந்த 4-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிகரது திருமுன்புசென்று அவர் கேட்குங் கேள்விகளுக்கு விடை கூறிவருங்கால் திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்திலுள்ள "ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ள" எனவரும் திருவிருத்தத்திற்கு அனுபவப்பொருள் வினவ குமரகுருபரருக்கு வாக்குத் தடைப்பட்டது. முருகன் அருளிய திருவாக்கு நினைவுக்குவர இவரே ஞானாசிரியரென் றுணர்ந்து அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தமக்கு ஞானாசிரியராக வேண்டுமென்று விண்ணப்பித்தார். தேசிகரும் சின்னாள் சிதம்பரவாசமேனும் செய்துவரும்படி ஆணைதர, குருபரர் சிதம்பரத்திற்குச் செல்லலானார்.

செல்பவர் திருப்புள்ளிருக்குவேளூரெனும் வைத்தீசுவரன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் முத்துக்குமாரசுவாமியை வழிபட்டு அவர்மீது "முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்" பாடி பின்னர்ச் சிதம்பரம் சேர்ந்தார். சிதம்பரத்தில் பொன்னம்பலத்தில் இறைவனது ஆநந்தக்கூத்தினைக் கண்டு கும்பிட்டு அங்குறையும் நாளில் சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை என்னும் பிரபந்தங்களை யியற்றினர். அங்குச் சிலநாள் தங்கி மீண்டும் தருமபுரமடைந்து மாசிலாமணிதேசிகரது திருவடிகளை வணங்க அவரும் முனிவருக்கு ஞானோபதேசம் செய்தருளினர். முனிவர் தமது ஞானசிரியராகிய மாசிலாமணி தேசிகர் மீது பண்டார மும்மணிக்கோவை என்னும் பிரபந்தத்தைப் பாடிச் சமர்பித்தனர். தாம் இதுகாறும் பரிசாகப்பெற்ற யாவையும் காணிக்கையாகவைத்து 'இதனை ஏற்றருள்க' என்று அவ்வாசிரியரைவேண்ட, அவர் 'இப்பொருள்களைக்கொண்டு காசிசென்று தருமஞ்செய்க' எனப் பணித்தனர்.

குமரகுருபரமுனிவர் அவ்வாணையைப்போற்றி, காசியை யடைந்தார். கங்கையில் நீராடி விசாலாட்சிதன்னொடு மமர்ந்த விசுவநாதரைத் தரிசித்துக் 'காசிக்கலம்பகம்' பாடியருளினர். அப்பொழுது காசியைஆண்டுவந்த பாதுஷாவைக் கண்டு அவ்வரசனிடம் பேசுதற்காக "சகலகலாவல்லிமாலை" எனும் பிரபந்தத்தைப் பாடி இந்துஸ்தான்பாஷையை ஓதாதுணரப் பெற்றார். பின்னர் பாதுஷாவைக்கண்டு திருவருள் விளக்கங்களாய அற்புதங்களை நிகழ்த்தி அவ்வரசர் தம்பால் அன்புபூண்டொழுகி நிற்க, காசியில் தருமமியற்றுதற்கு வேண்டிய நிலங்களை அவன்பாற்பெற்று அங்கு ஓர் மடம் நிறுவி சைவசமய ஸ்தாபனம் செய்திருந்து சிவனடிநீழலை யடைந்தார்.

சிவமயம்

திருவாரூர் நான்மணிமாலை

காப்பு

நாடுங் கமலேசர் நான்மணிமா லைக்குமிகப்
பாடுங் கவிதைநலம் பாலிக்கும்—வீடொன்ற
முப்போ தகத்தின் முயல்வோர்க்கு முன்னிற்கும்
கைப்போ தகத்தின் கழல்.

நூல்

நீரூர்ந்த முந்நீர் நிலவலய நீள்கொடிஞ்சித்
தேரூர்ந்த செல்வத் தியாகனே—ஆரூர
வீதிவிடங் காவடங்கா வேலைவிடம் போலுமதிப்
பாதிவிடங் காகடைக்கண் பார்த்து. 1

பார்பெற்ற வல்லிக்கும் பாகீ ரதிக்குமெய்ப் பாதியுமத்
தார்பெற்ற வேணியுந் தந்தார் தியாகர் தடம்புயத்தின்
சீர்பெற்றி லேமென்று நாளுல் வணங்கிச் சிலையெனவும்
பேர்பெற்ற தாற்பொன் மலைகுனித் தாரெம் பிரானென்பரே. 2

என்பாக நகுதலையோ டெழிலாக வணிந்தகம
லேச மற்றுன்
றன்பாக மிடப்பாகத் தலைவிகரு விழிதோய்ந்தும்
தலைவி பாகத்
தன்பாக நின்றிருநோக் கவைதோய்ந்துந் திருநிறம்வே
றுகை யாலப்
பொன்பாக மிதுவெனவு நின்பாக மிதுவெனவும்
புகலொ ணாதே. 3

ஒண்கதிர் பரப்புஞ் செங்கதிர்க் கடவுள்
வெயில்கண் டறியா வீங்கிருட் பிழம்பிற்

புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பிற்
காவலர்ப் பயந்து பாதபத் தொதுங்கிய
இருவே றுருவிற் கருவிரன் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் காண்டலு முளையெயி றிலங்க
மடித்தலத் திருத்தி வகிர்ந்துவள் ளுகிரால்
தொடுத்தபொற் சுளைபல வெடுத்துவாய் மடுப்பது
மானிட மடங்க றூணிடைத் தோன்றி
ஆடகப் பெயரி னவுணன்மார் பிடந்து
நீடுபைங் குடரி னிணங்கவர்ந் துண்டென
இறும்பூது பயக்கு நறும்பணை மருதத்
தந்த ணூரு ரெங்கையெம் பெரும
சிங்கஞ் சுமந்த செழுமணித் தவிசிற்
கங்குலும் பகலுங் கலந்தினி திருந்தாங்
கிடம்வலம் பொலிந்த விறைவியு நீயும்
நடுவண் வைகு நாகிளங் குழவியை
ஒருவிரி னொருவி ருள்ளநெக் குருக
இருவிருந் தனித்தனி யேந்தினிர் தழீஇ
முச்சுடர் குளிர்ப்ப முறைமுறை நோக்கி
உச்சி மோந்துமப் பச்சிளங் குழவி
நாறுசெங் குமுதத் தேறலோ டொழுகும்
எழுதாக் கிளவியி னேழிசை பழுத்த
இழுமென் குரல மழலைத் தீஞ்சொற்
சுவையமு துண்ணுஞ் செவிகளுக் கையவென்
பொருளில் புன்மொழி போக்கி
அருள்பெற வமைந்ததோ ரற்புத முடைத்தே. 4

தேங்குபுக ழாரூர்த் தியாகர்க்கெண் டிக்குமொளி
வீங்கு பகற்போது வெண்படமாம்—தூங்கிருள்சூழ்
கங்குற் பொழுது கரும்படமாஞ் செம்படமாம்
பொங்குற்ற புன்மாலைப் போது. 5

போதோன் றியதண் பொழிற்கமலேசர்பொன் மார்பிலெந்தாய்
சூதொன்று கொங்கைச் சுவடென்ப ராற்றொல் களிற்றுரிவை
மீதொன் றுவகண்டு வெங்கோப மாமுகன் வெண்மருப்பால்
ஈதொன் றடுகளி றென்றெதிர் பாய்ந்த வினைச்சுவடே. 6

இணங்குகம லாலயமா விதயத்திற் பொலிந்ததியா
கேச ரம்பொற்
கணங்குழைமண் மகளிதய கமலத்தும் பொலிதலினக்
கமல மான
மணங்கமழ்பங் கயத்தடஞ்சூழ் கமலைகம லாலயப்பேர்
வாய்த்த தான்மற்
றணங்கனையா ரிதயமுந்தம் மருட்கொழுந ரிதயமுமொன்
றாகுந் தானே. 7

தானமால் களிறு மாநிதிக் குவையும்
ஏனைய பிறவு மீகுந ரீக
நலம்பா டின்றி நாண்டுறந் தொரீஇ
இலம்பா டலைப்ப வேற்குந ரேற்க
புரவலர் புரத்தலு மிரவல ரிரத்தலும்
இருவே றியற்கையு மிவ்வுல குடைத்தே
அதா அன்று
ஒருகா லத்தி னுருவமற் றொன்றே
இடப்பான் முப்பத் திரண்டறம் வளர்ப்ப
வலப்பா விரத்தன் மாநிலத் தின்றே
விண்டொட நிவந்த வியன்றுகிற் கொடிகள்
மண்டலம் போழ்ந்து மதியக டுடைப்ப
வாணிலா வமுதம் வழங்கியக் கொடிகள்
வேனிலிற் பயின்ற வெப்பம தாற்றுபு
கொடியா ரெத்துணைக் கொடுமை செய்யினும்
மதியார் செய்திடு முதவியை யுணர்த்தும்
பன்மணி மாடப் பொன்மதிற் கமலைக்
கடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவ மற்றிது வாழிய பெரிதே. 8

பெருமான் றமிழ்க்கமலைப் பெம்மான்கைம் மானும்
கருமா னுரியதளுங் கச்சும்—ஒருமானும்
சங்கத் தடங்காதுந் தார்மார்புங் கண்டக்கால்
அங்கத் தடங்கா தவா. 9

வாவியம் போருகஞ் சூழ்கம லேசர்புள் வாய்கிழித்த
தூவியம் போருகந் தோறுநின் றோர்துணைத் தாளடைந்த
ஆவியம் போருகந் தாயிரங் கூற்றுடன் றாலுமஞ்சேல்
நாவியம் போருக நன்னெஞ்ச மேயவர் நாமங்களே. 10

நாம வேற்படைக் கடவுளைப் பயந்தருள்
நங்கைதென் கமலேசர்
வாம பாகத்தைக் கொளவலப் பாகநீர்
மங்கைகொண் டனள்போலாம்
தாம நீற்றொளி தன்னிறங் காட்டவெண்
டலைநிரை நுரைகாட்டக்
காமர் பூங்கொடி மடந்தையர் மதர்விழிக்
கயலுலா வரலாலே. 11

வருமுலை சுமந்து வாங்கிய நுசுப்பிற்
புரிகுழன் மடந்தையர் பொன்னெடு மாடத்
தொண்கதிர் வயிரமுந் தண்கதிர் நீலமும்
சேயொளி பரப்புஞ் செம்மணிக் குழாமும்
மாயிரு டுரந்து மழுகதி ரெறிப்பச்
சுரநதி முதல வரநதி மூன்றும்
திருவநீண் மறுகிற் செல்வது கடுப்ப
ஒள்ளொளி ததும்பு மொண்டமிழ்க் கமலைத்
தெள்ளமு துறைக்குந் திங்களங் கண்ணித்
தீநிறக் கடவுளின் கான்முறை வணங்குதும்
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழி லுளையன்
ஊற்றமில் யாக்கை யுவர்நீர்க் கேணிப்
புலத்தலை யுயிர்மீ னலைத்தனன் பிடிப்ப
ஐவளி பித்தென வமைத்துவைத் திருந்த
முத்தலைத் தூண்டி றாண்டி யத்தலை
வாழ்நாண் மிதப்பு நோக்கித் தாழா
தயிறலைத் தொடங்கி யெயிறலைத் திருத்தலிற்
றள்ளா முயற்சி தவறுபட் டொழிந்தன
வெள்குறீஇ மற்றவன் விம்மித னுக
அருட்பெருங் கடலினவ் வாருயிர் மீனம்
கருக்குழி கழியப் பாய்ந்து தெரிப்பரும்
பரமா னந்தத் திரையொடு முலாவி
எய்தரும் பெருமித மெய்த
ஐயநின் கடைக்க ணருளுதி யெனவே. 12

என்பணிந்த தென்கமலை யீசனூர் பூங்கோயில்
முன்பணிந்த தெய்வ முனிவோர்கள்—அன்பென்னும்

புண்சுமந்தோ னந்தி புடைத்தென்னார் புண்ணியனார்
மண்சுமந்தா ரென்றுருகு வார். 13

வரந்தந் தருள வரதம்மைத் தாலென் வரதமிடக்
கரந்தந்த தாலிவர் கையதன் றேபலி காதலித்துச்
சிரந்தந்த செங்கைக் கமலேசர் நாமந் தியாகரென்ப
தரந்தந்த வாள்விழி யாடந்த தாங்கொ லறம்வளர்த்தே. 14

வள்ளமுலைக் கலைமடந்தை மகிழ்நர்தலை மாலைசிர
மாலை யாகக்
கொள்ளுவது மலர்மடந்தை கொழுநர்தலை கிண்கிணியாக்
கோத்துச் சாத்த
உள்ளுவது மொழிவதுமற் றொழியாயே லடிமுடிகள்
உணர்ந்தே மென்றே
கள்ளமொழி வான்புகிற்றென் கமலேச வஃர்க்கவையே
கரியு மாமே. 15

கருந்தாது கடுத்த பெரும்பணை தாங்கும்
படர்மருப் பெருமைபைங் குவளை குதட்டி
மடிமடை திறந்து வழிந்தபா லருவி
கரைபொரு தலைப்பப் பெருகுபூந் தடத்து
வெண்டோ டவிழ்த்த முண்டகத் தவிசிற்
பானீர் பிரித்துண் டுவெள் ளெகினம்
நூற்பெருங் கடலு ளுண்பொரு டெரித்து
நாற்பயன் கொள்ளு நாமகட் பொருவும்
மென்பான் மருதத் தண்புனற் கமலைத்
தென்பான் மேருவிற் றிகழ்பூங் கோயில்
மூவ ரகண்ட மூர்த்தியென் றேத்தும்
தேவ ரகண்ட தெய்வ நாயக
நின்னடித் தொழும்பி னிலைமையின் றேனுநின்
றன்னடித் தொழும்பர் சார்புபெற் றுய்தலிற்
சிறியவென் விழுமந் தீர்ப்பது கடனென
அறியா யல்லை யறிந்துவைத் திருந்தும்
தீரா வஞ்சத் தீப்பிறப் பலைப்பச்
சோரா நின்றவென் றுயரொழித் தருள்கிலை
புறக்கணித் திருந்ததை யன்றே குறித்திடிற்
கோள்வாய் முனிவர் சாபநீர்ப் பிறந்த

தீவாய் வல்வினைத் தீப்பயன் கொண்மார்
உடல்சுமந் துழலுமக் கடவுளர்க் கல்லதை
பிறவியின் றுயர்நினக் கறிவரி தாகலின்
அருளா தொழிந்தனை போலும்
கருணையிற் பொலிந்த கண்ணுத லோயே. 16

கண்ணனூர் பொய்ச்சூள் கடைப்பிடித்தோ தென்புலத்தார்
அண்ணலா ரஞ்சுவரென் றஞ்சியோ—விண்ணோர்
விருந்தாடு மாரூரா மென்மலர்த்தா ருக்கா
திருந்தாடு கின்றவா வென். 17

என்னுயிர்க் கொக்கு மிளஞ்சேயொ
டேழுல கீன்றவனை
மன்னுயிர்க் கொக்குங் கமலைப்
பிரான்மணி கண்டங்கண்டு
மின்னுயிர்க் கும்புய லென்றுமென்
கொன்றைபைந் தாதுயிர்க்கப்
பொன்னுயிர்க் கொண்கன் பொலன்றுகி
லாமெந்தை பூந்துகிலே. 18

பூமாதி னிதயகம லத்து வைகும்
பொலிவானு மரியணைமேற் புணரி யீன்ற
மாமாது வழிபடவீற் றிருத்த லானும்
மறைமுதலு நடுமுதலு முடிவி னின்ற
தாமாத றெளிவிப்பார் போலு நீலத்
தரங்கநெடுங் கடன்ஞால மொருங்கு வாய்த்த
கோமாது மனங்குழையக் குழைந்த வாரூர்க்
குழகனார் கிண்கிணிக்கா லழக னாரே. 19

அழலவிர் சோதி முழுவெயி லெறிப்ப
இளநில வெறிக்குங் குளிர்மதிக் குழவியும்
வெஞ்சினம் பொதிந்த நஞ்சுமிழ் பகுவாய்
வெள்ளைமுள் ளெயிற்றுப் பிள்ளைவா ளரவும்
தெண்டிரை கொழிக்குந் தீம்புனற் கங்கைத்
தண்டுறை மருங்கிற் றனிவிளை யாட
உடன்வைத் தாற்றிய படர்சடைக் கடவுள்
எறும்வலித் தறுகட் டெறுசினக் கேழல்

முளையெயி றிலங்க முருகுகொப் புளித்துத்
தளையவி ழிதழித் தண்டார் மார்ப
திருவிழி யிரண்டினு மிருசுடர் வழங்கலின்
இரவுநன் பகலு மொருபுடை கிடந்தெனக்
கடங்கலுழ் கரடத் தடங்களிற் றுரிவையும்
மடங்கலீ ருரியு முடன்கிடந் தலமர
விண்பட நிவந்த திண்பு யாசல
நெட்டிலைக் கமுகி னெடுங்கயி றார்த்துக்
கட்டுபொன் னூசல் கன்னிய ராடவப்
பைங்குலைக் கமுகு பழுக்காய் சிந்த
வெண்கதிர் நித்திலம் வெடித்துகு தோற்றம்
கந்தரத் தழகு கவர்ந்தன விவையென
அந்தி லாங்கவ ரார்த்தன ரலைப்ப
ஒண்மிட றுடைந்தாங் குதிரஞ் சிந்தக்
கண்முத் துகுத்துக் கலுழ்வது கடுக்கும்
தண்டலை யுடுத்த வொண்டமிழ்க் கமலைப்
பொற்பதி புரக்கு மற்புதக் கூத்தநின்
சேவடிக் கொன்றிது செப்புவன் கேண்மதி
விலங்கினுண் மிக்கது விண்ணவர் தருவென
ஒருங்குவைத் தெண்ணுவ தோர்வழக் கன்மையின்
ஒத்த சாதியி னுயர்புமற் றிழிபும்
வைத்தன ரல்லதை வகுத்தனர் யாரே
ஆருயிர்க் கமைத்த வோரெழு பிறப்பினுள்
முற்படு தேவருண் முதல்வனென் றெடுத்துக்
கற்பனை கடந்த கடவுணிற் பழிச்சும்
தொன்மறைக் குலங்கள் முன்னிய தியாதெனப்
பன்முறை தெரிப்பினும் பயன்கொள வரிதால்
தேவரி னொருவனென் றியாவரு மருளுற
நீயே நின்னிலை நிகழாது மறைத்துக்
கூறிய தாகு மாகலிற்
றேறினர் மறையெனச் செப்பினர் நன்கே. 20

நல்லார் தொழுங்கமலை நாதனே நாதனெனக்
கல்லாதார் சொல்லுங் கடாவிற்கு—வெல்லும்
விடையே விடையாக மெய்யுணரா ரையுற்
றிடையே மயங்குமிது வென். 21

இதுவே பொருளென் றெவரெவர் கூறினு மேற்பதெது
அதுவே பொருளென் றறிந்துகொண் டேனப் பொருளெவர்க்கும்
பொதுவேயென் றாலும் பொருந்துமெல் லோர்க்கும் பொதுவினிற்கும்
மதுவேய் மலர்ப்பொழி லாரூரி னும்வைகும் வைகலுமே. 22

வைய முழுது முழுதுண்ண
வல்லாற் களித்து நவநிதியும்
கையி லொருவற் களித்தெமக்கே
கதிவீ டளித்தோர் கன்னிகைக்கு
மெய்யி லொருகூ றளித்தனரால்
விமலர் கமலைத் தியாகரென்ப
தைய ரிவர்க்கே தகுமுகம
னன்று புகழு மன்றுமே. 23

ஆமையோ டணிந்து தலையோ டேந்திக்
காமரு மடந்தையர் கடைதொறுங் கடைதொறும்
பலிதேர்ந் துண்ணினு முண்ணு மொலிகழற்
பைந்துழாய் முகிலும் பழமறை விரிஞ்சனும்
இந்திரா தியரு மிறைஞ்சினர் நிற்ப
மற்றவர் பதங்கள் மாற்றியும் வழங்கியும்
பற்றலர்ச் செகுத்து முற்றவர்த் தாங்கியும்
பரசுநர் பரசப் பணிகுநர் பணிய
அரசுவீற் றிருப்பினு மிருக்கு முறைசெயும்
யோக சாதனம் போகிகட் கின்மையிற்
செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
எருக்கங் கண்ணியுஞ் சூடி விருப்புடை
இடப்பான் மடந்தை நொடிப்போழ்து தணப்பினும்
மடலூர் குறிப்புத் தோன்ற விடலரும்
காமமீ தூர வேமுற் றிரந்தவள்
தாமரைச் சீறடி தைவந் தம்ம
புலவியிற் புலந்துங் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினு மிருக்கும் யோகிகட்
கெய்தா வொண்பொருள் கைவந்து கிடைப்ப
ஞான முத்திரை சாத்தி மோனமோ
டியோகுசெய் திருப்பினு மிருக்கு மீகெழு
தமனிய மாடத் தரமிய முற்றத்
தைங்கணைக் கிழவ னரசிய னடாத்தக்

கொங்கைமால் களிறுங் கொலைக்கண்வாட் படையும்
சில்கா ழல்குல் வெல்கொடித் தேரும்
பல்வகை யுறுப்பும் படையுறுப் பாகப்
பவக்குறும் பெறியும் தவக்குறும் பெறிந்து
நுணங்கிய நுசுப்பி னணங்கனுர் குழுமிக்
கைவகுத் திருந்து கழங்கெறிந் தாட
மையுண் கண்கண் மறிந்தெழுந் தலமரல்
செம்முகத் தாமரைச் சிறையளிக் குலங்கள்
அம்மென் காந்தளி னளிக்குல மார்த்தெழக்
கலந்துடன் றழீஇக் காமுற னிகர்க்கும்
பொலன்செய் வீதிப் பொன்மதிற் கமலை
அண்ணன் மாநகர்க் கண்ணுதற் கடவுள்
கற்பனை கழன்று மிற்றலின்
நிற்பதிந் நிலையெனு நியமமோ வின்றே. 24

இன்னீ ருலகத்துக் கின்னுயிர்யா மென்றுணர்த்தும்
நன்னீர் வயற்கமலை நாதனுர்—பொன்னூர்ந்த
சேவடிக்கா ளானுர் சிலரன்றே தென்புலத்தார்
கோவடிக்கா ளாகார் குலைந்து. 25

குலைவைத்த செவ்விள நீர்குளிர் பூம்பொழிற் கொம்புக்கின்ப
முலைவைத்த தொக்குங் கமலேசர் வேணி முகிழ்நகைவெண்
டலைவைத்த வேனற் புனமொக்குங் கங்கையத் தண்புனத்தில்
நிலைவைத்த மாதரை யொக்குங் கவணுக்கு நீள்பிறையே. 26

பிறையொழுக வொழுகுபுனற் கங்கை யாற்றின்
பேரணையிற் றொடுத்துவிட்ட பெரும்பாம் பென்னக்
கறையொழுகும் படவரவம் படரும் வேணிக்
கண்ணுதலார் கமலையிற்பைங் கமலை போல்வீர்
நறையொழுகு மலர்ப்பொழில்குத் தகையாத் தந்தீர்
நானிரண்டு மாவடுவு நாடிக் காணேன்
நிறையொழுகு மிளநீரு நிற்கக் காணேன்
நீர்செய்த காரியமென் னிகழ்த்து வேனே. 27

வேனிலா னுறுப்பின் மென்றசை யிறைச்சி
தீநாக் கறியத் திருக்கண் டிறந்தோய்
நான்மறை முனிவன் கான்முளை நிற்ப
விடற்கரும் பாசமோ டுடற்பொறை நீங்க

உயிருண் கூற்றுக்குத் திருவடி வைத்தோய்
கருங்கடல் வண்ணன் வெள்விடை யாகி
அடிஉ டாங்கிய வுதவிக் காங்கவன்
முழுவென்பு சுமந்த கழுமுட் படையோய்
தேவா சிரயன் றிருக்கா வணத்து
மேவா நின்ற விண்ணவர் குழாங்கள்
உருத்திர கணங்களென் றோடினர் வணங்கி
அருக்கிய முதல வகனமர்ந் தளிப்ப
இத்தலத் துற்றவ ரினித்தலத் துறுரெனக்
கைத்தலத் தேந்திய கனன்மழு வுறழும்
மழுவுடைக் கைய ராகி விழுமிதின்
மாந்தர் யாவருங் காந்தியிற் பொலியும்
வரமிகு கமலைத் திருநகர்ப் பொலிந்தோய்
எழுதாக் கிளவிநின் மொழியெனப் படுதலின்
நின்பெருந் தன்மை நீயே நவிற்றுதல்
மன்பெருங் புலமைத் தன்றே யும்பரின்
நின்னோ ரன்னோ ரின்மையி னின்னிலை
கூறுய் நீயெனிற் றேறுந ரிலரால்
தன்னுடை யாற்றன் முன்னோர் முன்னர்த்
தற்புகழ் கிளவியுந் தரூஉமென் றம்ம
நிற்புகழ்ந் திசைத்தனை நீயே யாக
இருடீர் காட்சிப் பொருடுணிந் துணர்த்தா
தியங்கா மரபி னிதுவிது பொருளென
மயங்கக் கூறுதல் மாண்புடைத் தன்றே
அளவில் காட்சியை யையமின் றுணர்த்தலிற்
றளரா நிலைமைத் தென்ப வென்றலிற்
றன்னுடை மயக்கந் திசைமேல் வைத்துச்
சென்னெறி பிழைத்தோன் திசைமயங் கிற்றென
மொழிகுவ தேய்ப்ப முதுக்குறை வின்மையிற்
பழமறை மயங்கிற் றென்னு முழுவதும்
எய்யா திசைக்குதும் போலும்
ஐயநின் றன்மை யளப்பரி தெமக்கே. 28

அள்ளற் கருஞ்சேற் றகன்பணைசூ ழாரூரர்
வெள்ளப் புனற்சடைமேல் வெண்டிங்கள்—புள்ளுருவாய்
நண்ணிலா தாரை நகைக்குநகை யையன்றே
தண்ணிலா வென்னுஞ் சகம். 39

தண்மல ரும்பொழிற் றென்கம லேசர்க்குச் சாத்துகின்ற
ஒண்மலர் சொன்மலர்க் கொவ்வாது போலுமற் றோர்புலவன்
பண்மலர் சாத்திப் பணிகொண்ட வாபச்சை மால்சிவந்த
கண்மலர் சாத்தியுங் காண்பரி தான கழன்மலரே. 30

மல்லல்வளங் கனிந்தபுகழ்க் கமலேசர் திருவுருவும்
வாம பாகத்
தல்லமர்பைங் குழலுமையா டிருவுருவு மிருவருக்கும்
அமுத மான
கொல்லயில்வேற் பசுங்குழவி திருவுருவு மருவுருவாம்
குணங்கண் மூன்றின்
நல்லுருவா தலினன்றே விவரகில காரணராய்
நவில்கின் றாரே. 31

நவமணி குயின்ற நாஞ்சில்சூழ் கிடக்கும்
உவளகங் கண்ணுற் றுவாக்கட லிஃதெனப்
பருகுவா னமைந்த கருவிமா மழையும்
செங்கண்மால் களிறுஞ் சென்றன படிய
வெங்கண்வா ளுழவர் வேற்றுமை தெரியார்
வல்விலங் கிடுதலின் வல்விலங் கிதுவெனச்
செல்விலங் கிடவெதிர் சென்றனர் பற்றக்
காக பந்தரிற் கைந்நிமிர்த் தெழுந்து
பாகொடு முலாவிப் படர்தரு தோற்றம்
நெடுவேல் வழுதி நிகளம் பூட்டிக்
கொடுபோ தந்த கொண்டலை நிகர்க்கும்
சீர்கெழு கமலைத் திருநகர் புரக்கும்
கார்திரண் டன்ன கறைமிடற் றண்ணல்
மூவரென் றெண்ணநின் முதற்றொழில் பூண்டும்
ஏவலிற் செய்துமென் றெண்ணா ராகி
அடங்கா வகந்தைக் கறிவெலாம் வழங்கி
உடம்பு வேறா யுயிர்ப்பொறை சுமந்து
நாளா நாளா நேடினர் திரிந்தும்
காணா தொழிந்ததை நிற்க நாணா
தியாவரு மிறைஞ்ச விறுமாப் பெய்துபு
தேவரென் றிருக்குஞ் சிலர்பிறர் தவத்தினும்
மிகப்பெருந் தொண்டரொ டிகலிமற் றுன்னொடும்

பகைத்திறம் பூண்ட பதகனே யெனினும்
நின்றிருப் பாத நேர்வரக் கண்டு
பொன்றின னேனும் புகழ்பெற் றிருத்தலின்
இமையா முக்கணெந் தாய்க்கு
நமனார் செய்த நற்றவம் பெரிதே. 32

நற்கரும்பு முக்கட் கரும்பென்னா நங்கைமீர்
விற்கரும்பன் கைக்கரும்போ வேம்பென்னும்—சொற்கரும்பின்
வாமக் கரும்பு மணிக்கரும்பா மாரூரர்
காமக் கரும்புங் கரும்பு. 33

கரும்புற்ற செந்நெல் வயற்கமலேசர்கண் டார்க்குமச்சம்
தரும்புற்றி னிற்குடி கொண்டிருந் தாரது தானுமன்றி
விரும்புற்று மாசுணப் பூணணிந் தார்வெவ் விடமுமுண்டார்
சுரும்புற்ற கார்வரைத் தோகைபங் கான துணிவுகொண்டே. 34

கொண்டலை யலைத்தபல தண்டலை யுடுத்தழகு
கொண்டக மலைப்ப தியுளார்க்
கண்டபி னெனக்கிதழி தந்தன ரெனப்பசலை
கண்டுயிர் தளிர்த்த மடவாள்
அண்டரமு தொத்தவமு தந்தனையி ருட்கடுவி
தன்பர ருண் மிச்சில் கொலெனா
உண்டிடு முளத்திலவ ருண்குவரென் மிச்சிலென
உண்டதை மறுத்து மிழுமே. 35

உமிழ்தேன் பிலிற்று மொள்ளிணர்க் கூந்தல்
அமிழ்துகு மழலை யம்மென் றீஞ்சொற்
சில்லரித் தடங்கண் மெல்லிய லொருத்தி
வரிசிலைத் தடக்கைக் குரிசின்மற் றொருவன்
பொன்னெடு மார்பிற் பொலன்கல னிமைப்பத்
தன்னுருத் தோற்றந் தரிக்கலள் வெருண்டு
மாலா யினனென வணங்கின னிரத்தலிற்
றேலா மொழியை வாழியை பெரிதெனப்
புலந்தன ளெழுதலுங் கலங்கினன் வெரீஇக்
கண்மலர் சிவப்ப மெய்பசப் பெய்தலிற்
றானு மாலாந் தன்மையள் கொல்லெனத்
தேறினன் றாழ்ந்து சிலம்படி திருத்திப்

பஞ்சியிற் பொலிந்த குஞ்சிய னிரப்பக்
கூடின எல்லள் கூடா எல்லள்
கைம்மிகு சீற்றமுங் காதலு மலைப்ப
வெள்ளப் புணர்ச்சியின் வேட்கையு ளடக்கி
உள்ளப் புணர்ச்சிய ளூடின ணிற்பது
தாதவிழ் தெரியற் சாக்கியர் பெருமான்
காதலுட் கிடப்பக் கல்லெறிந் தற்றே
இத்திற மகளி ரிளைஞரோ டாடும்
நித்தில மாட நீண்மறு குடுத்த
மைம்மா முகிறவழ் மணிமதிற் கமலைப்
பெம்மா னருமைப் பெருமா ளாயினும்
ஊனுண் வாழ்க்கைக் கானவர் குருசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
உண்டுமிழ் திநீ ருவந்தன ராடியும்
விருப்படிக் கொண்ட மிச்சிலூன் மிசைந்தும்
செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்தும்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்தும்
அருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்தும்
நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
தள்ளாக் காத றணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
ஒருகா லல்ல விருகா னடந்தும்
எளியரி னெளிய ராயினர்
அளியர் போலு மன்பர்க டமக்கே. 36

தம்மேனி வெண்பொடியாற் றண்ணளியா லாரூரர்
செம்மேனி கங்கைத் திருநதியே—அம்மேனி
மானே யமுனையந்த வாணிநதி யுங்குமரன்
தானே குடைவேந் தனித்து. 37

தன்னெக்குஞ் செல்வக் கமலைப் பிரான்செஞ் சடாடவிமற்
றென்னெக்கு மென்னி னெரியொக்குங் கொன்றை யெரியிலிட்ட
பொன்னெக்கும் வண்டு கரியொக்குங் கங்கையப் பொன்செய்விக்கும்
மின்னெக்கும் பொன்செய் கிழக்கொல்ல னெக்குமவ் வெண்பிறையே.

வெண்ணிலவு கொழித்தெறிக்குஞ் செஞ்சடைமோ லியர்வீதி
விடங்க ராரூர்க்

கண்ணுதல்பொற் புயவரைசேர் தனவரைகளிரண்டவற்றுட் கனக மேரு
அண்ணல்புய வரைக்குடைந்து குழைந்துதலை வணங்கிடுநம் அன்னை பார
வண்ணமுலைத் தடவரையவ் வரைகுழையப் பொருவதல்லால் வணங்கி டாதே. 39

வண்டுகூட் டுண்ண நுண்டுளி பிலிற்றித்
தண்டே னுறைக்குந் தடமலர்ப் பொதும்பரின்
விழுக்குலை தெறிப்ப விட்புலத் தவர்க்குப்
பழுக்காய் தூக்கும் பச்சிளங் கமுகிற்
செடிபடு முல்லைக் கொடிபடர்ந் தேறித்
தலைவிரித் தன்ன இலைதொறும் பணைத்து
மறிந்துகீழ் விழுந்தந் நறுந்துணர்க் கொடிகள்
நாற்றிசைப் புறத்து நான்றன மடிந்து
தாற்றிளங் கதலித் தண்டினிற் படரவப்
பைங்குலைக் கமுகிற் படர்சிறை விரித்தொரு
கண்செய் கூந்தற் களிமயி னடிப்ப
நெடுந்தாண் மந்திகள் குடங்கையிற் றூக்கி
முட்புறக் கனிக டாக்கக் கொட்புறும்
வானர மொன்று வருக்கைத் தீங்கனி
தானெடுத் தேந்துபு தலைமேற் கொண்டு
மந்திக டொடர மருண்டுமற் றந்தப்
பைந்துணர்க் கொடியிற் படர்தரு தோற்றம்
வடஞ்சூழ்ந்து கிடந்த நெடும்பெருங் கம்பத்
தணங்கனு ளொருத்தி யாடின ணிற்பப்
பெரும்பணை தாங்கி மருங்கினர் கொட்டக்
குடந்தலைக் கொண்டொரு கூன்கழைக் கூத்தன்
வடந்தனி னடக்கும் வண்ணம தேய்க்கும்
பூம்பணை மருதத் தீம்புனற் கமலைத்
திருநகர் புரக்குங் கருணையங் கடவுள்
அன்பெனு மந்தரத் தாசைநாண் பிணித்து
வண்டுழாய் முகுந்தன் மதித்தனன் வருத்த
அருட்பெருங் கடலிற் றோன்றி விருப்பொடும்
இந்திரன் வேண்ட வும்பர்நாட் டெய்தி
அந்தமி றிருவொடு மரசவற் குதவி
ஒருகோ லோச்சி யிருநிலம் புரப்பான்

திசைதிசை யுருட்டுந் திகிரியன் சென்ற
முசுகுந்த னுக்கு முன்னின் றாங்குப்
பொன்னுல கிழிந்து புடவியிற் றோன்றி
மன்னுயிர்க் கின்னருள் வழங்குதும் யாமென
மேவர வழங்குமான் மன்ற
யாவரு நமர்கா ளிறைஞ்சுமின் னீரே.

குமரகுருபர சுவாமிகள்

அருளிய

திருவாரூர் நான்மணிமாலை

வசனம்

உ

சிவமயம்

திருவாரூர் நான்மணிமாலை

(வசனம்)

காப்பு

வீட்டின்பம் அடைய நாடோறும் காலை, நண்பகல், மாலை என்னும் மூன்று காலங்களிலும் சிந்திப்போர்க்கு எதிர்ப்படுபவராகிய விநாயகப்பெருமானது திருவடிகள், யாவராலும் விரும்பப்படும் திருவாரூரின்கண் திருக்கோயில் கொண்டருளிய தியாகேசப் பெருமான் மீது பாடப்படுகின்ற நான்மணிமாலை எனும் பிரபந்தந்திற்குப் போற்றப்படும் கவிதைநலங்கள் மிகுதியும் தந்தருளும்.

நூல்

1. முத்து முதலிய மணிகள்படும் வளமைகுன்றாத கடலாற் சூழப்பட்ட பூமியாகிய நீண்ட தாமரைமுகை போலும் ஒருருப்பினைக்கொண்ட தேரினைச் செலுத்திய அருட்செல்வத்தையுடைய தியாகேசரே! திருவாரூர்ப் பெம்மானே! வீதிவிடங்கன் எனும் திருநாமத்தை யுடையானே! அரைச் சந்திரன் தடுத்தற்கரிய திருப் பாற்கடலில் எழுந்த ஆலகால விடம்போலக் கொல்லுகின்ற நிலவாகிய விடத்தைக் காலாநின்றது. நினது திருக்கண்ணேக்கஞ்சாத்தி என்னைக் காத்தருள்வீராக.

2. உலகத்தையீன்ற உமாதேவியாருக்குத் தமது திருமேனியில் ஒருபாதியையும், கங்கைக்குக் கொன்றைமாலையணிந்துள்ள சடையையும் கொடுத்தருளிய தியாகேசரது அகன்ற புயத்தின் சிறப்பைப் பெற்றிலேமென்று மேருமலை, நாணி(கயிற்றி)னல் வளைந்து, சிலை (வில்) எனவும் பெயர் பெற்றது.

இஃதறியாதார் பொன்மலையாகிய மேருமலையை எமது தலைவராகிய சிவபெருமான் வில்லாக வளைத்தார் என்று கூறுவர்.

3. திருமேனியில் எலும்பாபரணத்தை நகுவெண்டலையுடனே அழகாக அணிந்துள்ள தியாகேசப் பெருமானே! நினது பாகமாகிய வலப்பாகத்தில் இடப்பாகத்தையுடைய உமாதேவியாரின் கரியகண் நோக்குவதாலும், உமாதேவியார் பாகத்தில் அன்பாக நினது திருக்கண்பார்வை படிவதாலும் இயல்பாகவுள்ள நின்திருமேனியின் நிறமாகிய செம்மையும் கருமையும் வேறுபடுகின்றமையின், உமாதேவியார்பாகம் ஈதென்றும் நினதுபாகம் ஈதென்றும் சொல்லுவதற்கு அரிதாகின்றது.

4. ஒளிபொருந்திய கிரணங்களைப் பரப்புகின்ற சிவந்த சூரியனது வெயிலைப் பார்த்தறியாத மிகுந்த விருளுடைய மேகங்கள் தூங்குகின்ற பூக்களையுடைய குளிர்ச்சி பொருந்திய சோலையின்கண்ணே, காவலாளர்க்குப் பயந்து மரங்களில் ஒதுங்கிநின்ற மனிதவுருவமும், விலங்கின் உருவமுமாகிய இரண்டு வேறு வகைப்பட்ட வடிவத்தைக்கொண்ட கரியவிரல்களையுடைய குரங்கு பொன்னிறம் போலும் பழுத்த அழகிய சுளைகளையுடைய பலாப் பழத்தைத் தன் முன்னே பார்த்தலும், அதனைத் தன் மடியின் மீதிருத்தித் தனது முளைபோன்ற பற்கள் விளங்க, கூரிய நகத்தாற் பிளந்து வரிசையாகவுள்ள அழகிய சுளைகளைப் பல வெடுத்து உண்ணும் காட்சி, நரசிங்கமூர்த்தி தூணினின்றும் வெளிப்பட்டு இரணியனெனும் அசுரனைத் தம்மடித்தலத் திருத்தி மார்பினைப் பிளந்து நீண்டபசிய குடரின் திணத்தை வலிந்து எடுத்து உண்பது போன்ற வியப்பைத் தரும் சிறப்பினதாய நறுமணம் வீசும் வயல்கள் சூழ்ந்த மருதநிலத்தின்கண் விளங்கும் அழகிய குளிர்ச்சியுடைய திருவாரூரில் திருக்கோயில்

கொண்டருளிய எனது தந்தையே! எனது தலைவனே! சிங்கம் சுமந்து கொண்டிருக்கின்ற ஒளிமிக்க மணியால் அலங்கரிக்கப்பட்ட சிங்காதனத்தில் இரவும் பகலும் கலந்திருந்தனபோல இடவலமாக உமாதேவியாரும் தேவரீரும் வீற்றிருந்தபோது உங்கட்கு நடுவே இருந்த மிக்க இளமையுடைய முருகனை ஒருவரைக் காட்டிலும் மற்றவர்க்கு உள்ளம் மிகநெகிழ்ந்து உருகுதலினால் நீங்கள் இருவீரும் தனித் தனியாகக் கைகளில் ஏந்தித் தழுவி மூன்று கண்களும் குளிர்ச்சியடைய பலமுறை நோக்கியும், உச்சி மோந்தும் அச்சிறுகுழவியாகிய முருகனது வாசனை வீசுகின்ற சிவந்த குமுதமலரை யொத்த வாயிதழின்கண் வாயூறலுடன் வடிகின்ற வேதம்போலும் ஏழிசைகள் பொருந்திய இனிய குரலை யுடைய மழலையாகிய இன்பந்தரும் மொழிகளைச் சுவைத் துண்ணும் செவிகளுக்கு, எம் தலைவனே! எனது பொருளில்லாத புல்லிய சொற்களைச் செலுத்தி உனது திருவருளைப்பெற நின்ற நிலைமை மிகவும் ஓர் அற்புத மாகும்.

5. நிலைத்த புகழையுடைய திருவாரூரில் விளங்கு கின்ற தியாகேசருக்கு எண்திக்குகளிலும் ஒளிநிறைந்த பகற்போது வெள்ளிய ஆடையாகும்; இருள்நிறைந்த இராப்போது கரிய ஆடையாகும்; நிறைந்த, சிவந்த மாலைப்போது செந்நிற ஆடையாகும்.

6. தியாகேசர் திருமேனியின்மீது பழைய யானைத் தோல் போர்வையாக விளங்குவதனை யானைமுகக் கடவுள் பார்த்து இஃதொரு கொல்லுங்களிறு என்று எண்ணி மிகுந்த கோபாவேசத்துடன் வெள்ளிய கொம்புகளால் எதிர்த்துத் தாக்கியதால் உண்டான இரண்டு சுவட்டினை, பூக்கள் பொருந்திய குளிர்ந்த சோலைகள் நிறைந்த திருவாரூரில் திருக்கோயில் கொண் டுள்ள தியாகேசரது அழகியமார்பில் எமது தாயாகிய உமாதேவியாரின் சூதாடுங் கருவியையொத்த கொங்கை களால் ஏற்பட்ட சுவடு என்பர்.

7. இலக்குமியாகிய **கமலா** விரும்பி ஒடுங்கும் திருமாலிதயத்தில் வீற்றிருந்தருளும் தியாகேசர் அழகிய பொற்கட்டிகளாலாகிய குண்டலங்களையணிந்த நிலமகளின் இதயகமலத்தில் எழுந்தருளியிருத்தலால், அத்திருமால் இதயகமலம் கமலாவின் இருப்பிடமானது (கமலை + ஆலயம்)போலவே நறுமணம்வீசும் தாமரைத் தடாகத்தால் சூழ்ந்த திருவாரூரும் **கமலாலயம்** எனும் பேர்பெற்றது. ஆதலினால் தெய்வ மங்கைகளாகிய பூமகள், நிலமகள் இதயங்களும் அவர்களது அருட்கணவராகிய திருமால் இதயமும் தியாகேசரைப் பேணுங்கருத்தால் ஒன்றுந்தன்மையன.

8. மதம் பொருந்திய பெரிய யானையையும், பெரிய நிதிக்குவியல்களையும், பிறபொருள்களையும் அறச்சிந்தையுடையோர் கொடுப்பாராக. நன்மையும் பெருமையும் இல்லாதாராய், வெட்கமும் அழிந்து, வறுமை வருத்த ஏற்கத்தகுதியுடையோர் ஏற்பாராக. ஆகவே இவ்வுலகம், ஈகைத் தன்மையுடையோர் தம்மிடம் வந்து இரந்தார்குக் கொடுத்துப் பாதுகாத்தலும், யாசிப்போர் இரத்தலுமாகிய இருவேறு இயல்பினையுடையதாகும். அஃதல்லாமல் ஒரே காலத்தில் ஓர் உருவம் தனது இடப் பக்கத்தால் முப்பத்திரண்டு தருமங்களைச் செய்து வளர்த்தலும், வலப்பக்கத்தால் மனைகள்தோறும் சென்று பலியேற்றலும் இப்பெரிய நிலவுலகத்தில் இல்லையாகும். அத்தகைய ஈரியல்போடுகூடிய திருவுருவத்தைத் திருவாரூரினில் தரிசித்தோம். அது நீண்ட காலம் வாழ்வதாக. இவ்வுருவங் காண்பதற்கு இடமாயுள்ள திருவாரூரின் சிறப்பு விரிப்பின், ஆகாயத்தைத் தொடும்படி உயர்ந்த பெரிய துகிற்கொடிகள் மேகமண்டலத்தைப் பிளந்து, சந்திரனது வயிற்றைக் கிழிக்க, தமக்குத் துன்பஞ் செய்தன அக்கொடிகள் என்றுங் கருதாது, ஒளிபொருந்திய நிலவாகிய அமுதத்தைச் சொரிந்து, வெயிலால் நேர்ந்த அவைகளது வெப்பத்தைப் போக்குதல் **கொடியவர் எத்துணைக் கொடுமைகள் செய்**

திடினும் பொருட்படுத்தாது அறிவுடையோர் செய்யும் உதவியை அறிவிக்கின்றதும், பலமணிகளால் அலங் கரிக்கப்பட்டதுமான மாடங்களையுடைய அழகிய மதிலாற் சூழப்பட்ட காவல் பொருந்திய நகரம் திருவாரூர் என்பதாம்.

9. எனது தலைவனும், அழியா வின்பம் அளிக்க வல்ல திருவாரூரில் திருக்கோயில் கொண்டருளிய பெருமானுமாகிய தியாகேசரது திருக்கையில் மானையும், யானையினின்றும் உரிக்கப்பட்ட தோலையும், அரையிற் கட்டிய கச்சையும், இடப்பாகம் பெற்றருளிய உமா தேவியாரையும், சங்கக்குழையணிந்த நீண்ட காதையும், மாலையணிந்த திருமார்பையும் பார்த்தபோது என் உள்ளத்து அடங்காத ஆசை மேலெழா நிற்கும்.

10. தாமரைத் தடாகங்களினால் சூழ்ந்த திருவாரூர்த் தலைவரும், அசுரனாகிய கொக்கினது வாயைப் பிளந்த திருமாலாகிய இறகு பிணித்த அம்புடையவரும், ஊழி தோறும் அழியாது விளங்குபவருமாகிய தியாகேசப் பெருமானுடைய திருவடிகள் இரண்டினையும் சரண டைந்த நல்ல நெஞ்சமே, ஆவியைக் கவரும்பொருட்டு போரினை விரும்பி ஆயிரம் இயமன் வந்து வருத்தினாலும் அஞ்சேல். அவர் நாமங்களின் உட்பொருள்களை ஆராய்ந்து உணர்வாயாக. நாவே, அவ்விறைவரது நாமங்களையே ஓதுவாயாக.

11. பெருமைவாய்ந்த திருவெண்ணீற்றின் வெள்ளிய வொளியானது தியாகேசரது வலப்பாகத்தே கங்கையின் இயல்பாயமைந்த வெண்ணிறத்தைக் காட்டுதலாலும், இறைவர் அணிந்துள்ள வெள்ளிய தலை மாலைகள் மேற்செல்லும் நுரைகளின் தோற்றத்தைக் காட்டுதலாலும், அழகிய பூங்கொடிகளையொத்த உமா தேவியார், கங்காதேவியாராகிய இருவரின் மதர்த்த கண்களாகிய கயல்மீன்கள் உலாவுதலாலும், அசுரர்க்கு

அச்சத்தை விளையாநின்ற வேலாயுதத்தையுடைய முருகப்பெருமானைப் பெற்றருளிய உமாதேவியார் அழகிய திருவாரூரின்கண் எழுந்தருளிய தியாகேசரது இடப்பாகத்தைப் பெற, வலப்பாகத்தை நீர் மங்கையாகிய கங்காதேவி தன்னுரிமையாகப் பெற்றனள் போலாம்.

12. எழுகின்ற பெரிய முலைகளைச் சுமந்து துவளும் இடையினையும், பின்னு தலைச்செய்து அலங்கரிக்கப்பட்ட கூந்தலையுமுடைய பெண்கள் விளங்கும் அழகிய நீண்ட மாடங்களில் ஒள்ளிய கிரணங்களை வீசும் வயிரமணிக் கூட்டமும், குளிர்ச்சிபொருந்திய கிரணங்களையுடைய நீலமணிக் கூட்டமும், சிவந்தவொளியைப் பரப்பும் மாணிக்கத்தின் கூட்டமும், பெரிய புறவிருளைக் கெடும்படி இளவெயிலை வீசுதல், கங்கை, யமுனை, சோணை என்று பேசப்படுகின்ற மேம்பட்ட மூன்று நதிகளும் அழகிய நீண்ட வீதிகளிற் செல்வதுபோன்று விளங்கும். அங்ஙனம் சிறந்த புகழ் நிறைந்ததும், மேலான அழியாவின்பம் அளிக்க வல்லதுமான திருவாரூரில் எழுந்தருளியுள்ள தெள்ளிய அமுதத்தைச் சொரியாநின்ற பிறைச் சந்திரனைத் திருமுடியில் அணியும் மாலையாகக் கொண்ட தீப்போலுஞ் செந்நிறமுடைய பெருமானே! எமது தலைவரே! இயமன் என்னும் பெயருடைய கொடிய தொழிலைச் செய்யும் வலைஞன் நிலவாத உடம்பாகிய உவர்நீரையுடைய கிணற்றில் உயிர்களாகிய மீன்களை வருத்திப்பிடிப்பதற்குச் சிலேத்துமம், வாதம், பித்தம் என அமைக்கப்பட்ட மூன்று தலையுள்ள தூண்டிலை உடலாகிய கிணற்றில் வீசி, வாழ்நாளாகிய சடைக்கருவியைப் பார்த்து, தாமதியாது உண்ணத்தொடங்கி, பற்களை நறநறவென்று மென்று கொண்டிருத்தலினல் தவருத முயற்சி பிழைபட்டதென வெட்கமுற்று வியப்படைந்து நிற்கவும், அவ்வரிய உயிர்களாகிய மீன்கள் நினது அருளாகிய பெரிய கடலில் பிறவிக் குழியினின்றும் நீங்கத் தாவிப்பாய்ந்து, அறிதற்

கரிய பேரின்பமாகிய அலைகளில் உலாவி அடைதற் கருமையாகிய பெருமிதமடையவும் நினது திருக்கடைக் கண் நோக்கம் பாலிப்பீராக' என முறையீடு செய்து யாம் நினது திருவடிகளில் வணங்குவோம்.

13. அழகிய திருவாரூரில் குடிகொண்ட, எலும்பு மாலையணிந்த ஈசனுராகிய தியாகேசரது திருக்கோ யிலான பூங்கோயிலின்முன்னர்ப் பணிந்தவர்களாகிய தெய்வத்தன்மை பொருந்திய முனிவோர்கள் நந்தியம் பெருமான் பிரம்புகொண்டு அடித்தலால் 'யாம் புண்ணைச் சுமந்தோம்' என்று வருந்தாது, புண்ணியனு ராகிய இறைவன் மண்சுமந்து கூலிகொண்டு கோலினு லடிபட்ட திருவிளையாடலைச் சிந்தித்து, அவர் திருமேனி எத்துணை நொந்ததோ என்று மனம் உருகுவரெனின் அம்முனிவர்களது அன்பினை எங்ஙனம் அளவிட்டுக் கூறுவது; கூறவியலாதாம்.

14. பிச்சை விரும்பி பிரமனது தலையோட்டினை ஏந்திய சிவந்த கையினையுடைய திருவாரூர்த்தலைவர் தம் அடியார்களுக்கு வரங்களைத்தர, வரதமாகத் தமது திருக்கரத்தை வைத்தது என்ன பயனுகும்! அவ் வரதத்தைக் காட்டிய கரம் இடது கரமாம். அக்கரம் இவரது கரமன்று; உமாதேவியார் கரமேயாகும். அங் ஙனமாக இவருக்குத் தியாகரென்ற திருநாமம் கூரிய ஒளிபொருந்திய விழிகளையுடைய உமாதேவியார் முப் பத்திரண்டு அறங்களை வளர்த்துக் கொடுத்ததேயாம்.

15. அழகிய திருவாரூரில் விளங்கும் தியாகேசரே! கிண்ணம்போலும் முலையினையுடைய கலைமகள் கணவ னுகிய பிரமரது தலைவரிசைகளைச் சிரமாலையாகக் கொள்ளுவதையும், பூமகளாகிய இலக்குமியின் கணவ னுகிய விஷ்ணுமூர்த்தியின் தலைகளைக் கிண்கிணியாகக் கோவைசெய்து திருவடிகளில் சாத்த நினைந்துகொள்ளு வதையும் ஒழிந்தருளுவீராக. அங்ஙனம் ஒழிந்தரு ளாவிடில் திருமுடி திருவடிகளைக் கண்டோம் என

அவர்கள் மொழியவரின் அவர்கட்கு அம்மாலைகளே சாட்சியாகும்.

16. பசிய குவளைமலர்களை மெல்லுதலால், இரும்பினையொத்த பெரிய கிளைகள்போல அகன்ற கொம்புகளையுடைய எருமையினது மடியினின்றும் மடை போன்று சுரந்து வடிந்த பாலாகிய அருவி கரையினை மோதி அலைக்கும்படியாகப் பெருகுகின்ற, பொலிவாகிய தடாகத்திலுள்ள வெள்ளிய இதழ்கள் அவிழ்ந்த தாமரையின்மீது வீற்றிருக்கும், பாலையும் நீரையும் பிரித்துண்ணுகின்ற, பரிசுத்தமான வெண்ணிறத்தையுடைய அன்னம், நூல்களாகிய பெருங்கடலிலுள்ள நுண்பொருள்களை உணர்த்தி அறம் பொருளின்பம் வீடெனும் நான்கு உறுதிப் பொருள்களை அறியச் செய்யும் கலைமகளையொத்து விளங்கும் சிறப்பினையுடைய மருத நிலத்திலுள்ளதும், குளிர்ச்சிபொருந்திய நீர் நிலைகள் சூழ்ந்திருக்கின்றதுமான திருவாரூரில் மேருமலைபோல் விளங்கும் திருக்கோயில்கொண்டெழுந்தருளியுள்ளவரே! பிரமன், திருமால், உருத்திரன் எனும் மூவராலும் "அகண்ட மூர்த்தியே" என்று போற்றப்படுபவரே! தேவரகண்டர் என்னும் திருநாமத்தையுடையவரே! தேவர்களைத் தன் ஆணைவழி இயக்குகின்றவரே! தேவரீரது திருவடித் தொண்டில் உறுதியுடையேனல்லேனெனினும் திருவடித் தொண்டரது இணக்கமடைந்து உய்வனாதலினால் அடியேனது துன்பத்தைத் தீர்ப்பது கடமை என அறியாதீரல்லீர். அஃது அறிந்திருந்தும் நீங்காத வஞ்சனையையுடைய கொடிய பிறவியானது என்னை வருத்தாநிற்ப அதனால் தளர்கின்ற அடியேனது துயரை ஒழித்து அருள்செய்திலீர். இங்ஙனம் புறக்கணிக்கப்பட்டிருப்பது யாது காரணமென்று யோசிக்குமிடத்து, உறுதியுடைய பிருகு முதலிய முனிவரது சாபத்தின் றன்மையாற்றோன்றிய, துன்புறுத்தும் வலியவினையினது கொடியபயனை அநுபவிப்பவராய்ப் பிறவியெடுத்த முறையால் உடலைச்

சுமந்து உழலும் திருமால் முதலிய கடவுளரல்லது, ‡பிறவியின் துன்பத்தைத் தேவரீர் அறிதலில்லை. ஆகலான் கருணையோடு விளங்கும் நெற்றிக்கண்ணை யுடையோய்! அடியேனுக்குத் திருவருள் புரியாது ஒழிந்தீர்போலும்.

17. தேவர்களுக்கு இன்பத்தைக் கொடுக்கும் திருவாரூர்ப் பெருமானே! தேவரீரது மெல்லிய தாமரைபோன்ற திருவடியைத் தூக்காது அமர்ந்திருந்தே ஆடுகின்றனிலை, திருமால்கூறிய பொய்ம்மொழி கருதியோ? அல்லது தென்புலத்தேயுள்ள பிதுரர்தம் தலைவனாகிய இயமன் அஞ்சுவானென்று பயந்தோ? மற்று, யாது காரணத்தாலென்று அடியேனுக்குக் கூறி யருளுவீராக.

18. எனது உயிரைப்போன்ற இளைய முருகப் பெருமானுடன், ஏழுலகங்களை யீன்ற உமாதேவியாரது உயிரை யொத்தவரும், திருவாரூரில் எழுந்தருளி யிருப் பவருமான தியாகேசரது நீலமணிபோலும் கறுத்த கண்டத்தை, திருமுடியிலுள்ள மெல்லிய கொன்றை அரும்புகள் பார்த்து, மின்னலைத் தோற்றுவிக்கும் கருமேகமென்று பொன்தாதினைச் சொரிதலால், அடியேனது தந்தையாகிய இறைவரது தோலாடை, இலக்குமியின் ஆன்மநாயகராகிய திருமாலின் பொன்னுடைபோல விளங்குவதாகும்.

19. நீல நிறம் பொருந்திய அலைகளையுடைய நெடிய கடலாற் சூழ்ந்த உலகமுழுவதையும் ஒருங்கே பெற்ற உமாதேவியாரின் மனம் குழையும்படி குழைந் தருளிய, திருவாரூரில் திருக்கோயில் கொண்டருளிய இளமையை யுடையவரும், கிண்கிணி யணிந்த திருவடிகளையுடைய அழகுடையவருமாகிய தியாகேசர்,

---

‡ "பிறப்போ டிறப்பென்று மில்லாதான் காண்" என்பது திருவாரூர்த் திருத்தாண்டகம்

பூமிதேவியினது * உள்ளத் தாமரையில் வீற்றிருத்தலாலும், திருப்பாற்கடல் பெற்ற இலக்குமி தம்மை வழிபட சிங்காதனத்தில் வீற்றிருத்தலாலும், பிரமதேவரும் திருமாலும் சங்காரகாலத்து ஒருவராகநின்ற தாமே யாதலை யாவரும் அறியத் தெளிவிப்பார்.

20. நெடிய இலைகளையுடைய கமுகமரத்தில் நீண்ட கயிறுகள் நன்றாகக் கட்டி விடப்படும் அழகிய ஊசல்களில் பெண்கள் ஆட, அப்பசிய குலைகளையுடைய கமுகமரங்கள் சிவந்த பழுத்த காய்களைச் சிந்தாநிற்ப, பாளையினின்றும் வெடித்து வெள்ளிய ஒளிபொருந்திய முத்துக்கள் சிந்துகின்ற தோற்றம், அப்பெண்கள் தங்கள் கழுத்தின் அழகை இக்கமுகமரங்கள் களவு செய்தன என்று அம்மரங்களைக் கயிற்றால் பிணைத்து வருத்துதலினால் கழுத்து உடைபட்டு உதிரம் சிந்த க்கண்ணீர் உகுத்து அழுவதுபோலும் காட்சியளிக்கும் குளிர்ந்த சோலைகளாற்சூழ்ந்த மேம்பட்ட அழியாவின்பம் அளிக்கவல்ல திருவாரூரையாளும் ஞானத் திருநடனம் புரிபவனே! இளநிலாவை வீசுகின்ற குளிர்ச்சியுடைய பிறைச்சந்திரனும், கொடிய கோபத்தையும், மறைந்து தங்கிய விடத்தை யுமிழ்கின்ற பிளவுபட்ட வாயினையும், கூரிய வெள்ளைப் பற்களையும் உடைய ஒளிபொருந்திய பாம்புக்குட்டியும் தெள்ளிய அலைகளை வீசுகின்ற இனிய புனலையுடைய கங்கையினது குளிர்ந்த துறையினிடத்துத் தனித்து விளையாடும்படி ஒருங்கே வைத்து பகைமைபோக்கிய, அனலை வீசுகின்ற சூரியன்போல நிறைந்த பிரகாசத்தைத்தரும் படர்ந்தசடையுடைய இறைவனே! மிகுந்த வன்மையையும், அஞ்சாமையையும், கொல்லும் கோபத்தையும் உடைய பன்றியினது மூங்கில் முளை போன்ற கொம்பு விளங்கித் தோன்ற தேன் சொரிய முறுக்கவிழ்ந்த குளிர்ந்த கொன்றைமாலை யணிந்த

* "மேதினிக் காதன்மங்கை இதயகமலமா மாரூர்" என்றனர் சேக்கிழாரும்.

மார்புடையோனே! அழகிய இரண்டு கண்களினின்றும் சந்திர சூரியராகிய இருசுடர்கள் நிலவையும் வெயிலையும் பரப்புவதால் இருளும் நடுப்பகலும் ஓரிடத்திற் றங்கினாற் போல, மதநீரைப் பெருக்கும் கன்னத்தையுடைய பெரிய யானையினதுதோலும், நரசிங்கத்தினின்றும் உரித்த தோலும் ஒருங்கு கிடந்துஅசைய, ஆகாயத்தை யளாவி யுயர்ந்த வன்மைமிக்க மலைபோன்ற திரண்ட தோள்களை யுடையோனே! கற்பனையைக் கடந்த கடவுளே! தேவரீரது திருவடிகளுக்கு ஓர் விண்ணப்பம் அதனைக்கேட்டருள்வீராக. மிருகங்களினுள் தேவர்தரு மிக்கதென்று ஒன்றாகவைத்து எண்ணுவது ஒரு முறைமையன்றாகலின் ஒத்த சாதிப்பொருள்களை உயர்வும் இழிபும் பாராட்டி வழங்கினரல்லாமல் வேற்றுச் சாதிப்பொருள்களை ஒருங்குவைத்து வழங்கினர் யாவர்? ஒருவருமிலர். ஆதலால் அரிய உயிர்கட்கு அமைக்கப்பட்ட எழுவகைப் பிறப்பினுள் மேம்பட்ட தெய்வப் பிறப்பில் முதன்மையுடையவனென்று சிறப்பிக்கும் நான்கு வேதங்களும் நின்னைக்குறித்துக் கருதிய பொருள் யாதெனப் பலமுறை ஆராய்ந்தாலும் உண்மையுணர்தல் அரிதாகும். தேவருள் நீ ஒருவன் என்று யாவரும் மயக்கமுற, நீயே நினது உண்மை நிலையைத் தோன்றாதபடி மறைத்துச்சொல்லியதாகு மாகலின் அறிந்தோர் அவ்வேதங்கட்கு மறை என்று பெயரிட்டு வழங்கினர்.

21. * மெய்யன்பர்கள் வணங்கும் ஆரூரில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானோ இறைவன்? என்று மெய்ந்நூல்களைக் கற்றுணராதார் கேட்கும் கேள்விக்கு அதனை வெல்லுகின்ற விடையாவது சிவபெருமான் ஆரோகணித்து வரும் திருமாலாகிய இடபமேயாகும். (திருமாலாகிய இடபத்தைச் சிவபெருமான் செலுத்து

* திருமால் முதலிய தேவர்களையே முதல்வரெனக்கொண்டு மயங்குவோர்களைத் தெளிவுபடுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

பவராதலின் அவரே முதல்வர் என்பது தெளிவு.) இவ்வாறுணர்ந்தும் உண்மை யறியாதவர்களாய்ச் சந்தேகமுற்றுப் பின்னும் மயங்குவது யாது காரணம்.

22. **ஒவ்வொரு சமயத்தார்களும் தங்கள் தங்கள் கடவுளே பரம்பொருள் என்று கூறினாலும், அதனை ஏற்றுக்கொள்ளும் பொருள் எதுவோ, அதுவே பரம் பொருள் என்று தெளிந்துகொண்டேன். எல்லாவற்றை யும் உடன்பாடாக ஏற்றுக்கொள்ளும் அந்த உண்மைப் பொருள் எச்சமயத்தார்க்கும் பொதுவாகுமென்று கூறி னாலும் பொருந்தும்.** ஏனெனில் யாவரும் தரிசித்தற்குப் பொதுவாகிய திருச்சிற்றம்பலத்தே அப்பொருள் நின்று நடிக்கும். அன்றியும் தேன்பொருந்திய மலர் களையுடைய சோலைகள் சூழ்ந்த ஆரூரிலும் எந்நாளும் தங்கும். (அம்பலம் பொதுவென்பது போல ஆரூரும் யாருடைய ஊர் எனப்பொருள்படுவதால் பொது என்று தொனிப்பொருள் தந்து நின்றது.)

23. திருவாரூரில் திருக்கோயில் கொண்டருளிய சிவபெருமான், கேழல் வடிவங்கொண்டு மண்ணைக் கீண்டு உண்ணவல்ல திருமாலுக்குப் பூமிமுழுவதையும் கொடுத்தலினாலும், குபேரனுக்கு ‡ ஒன்பதுநிதிச் செல் வங்களையும் கையில் கொடுத்தலினாலும், அடியர்களாகிய எங்களுக்கு முத்தி வீட்டைக் கொடுத்தலினாலும், ஒப்பற்ற உமாதேவியாருக்குத் தம் திருமேனியில் ஒரு பாகத்தைஅளித்தமையாலும் தியாகர் என்று மொழிவது தலைவராகிய இவருக்கே தகுதியாகும். உபசார வார்த்தையன்றாம். வெறும் புனைந்துரையுமன்று.

24 மேலோங்கிய பொன் மாளிகையினது நிலா முற்றத்தில் ஐவகை மலர்களைப் பாணங்களாகவுடைய மன்மதன் தனது அரசினைச் செலுத்துதற்கு மகளிரது

‡ சங்கம், பதுமம், மகாபதுமம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம் என்பனவாம்

கொங்கையாகிய பெரிய யானைப்படையும், கொலைத் தொழிலை யுடைய கண்களாகிய வாளாயுதமும், ஏழு வடமாகிய மேகலையணிந்த அல்குலாகிய வெற்றிக்கொடி யணிந்த தேரும், மற்றும் பலவகையான அங்கங்களும் தனது சேனை அங்கங்களாகக்கொண்டு, பிறவியாகிய பகையினை யொழிக்கும் தவமாகிய பகையை அழித்துத் துவளும் இடையையுடைய தெய்வப்பெண்களை யொத்த மகளிர் கூடி பக்கம் வகுத்திருந்து, அம்மானைக்காயை வீசிவிளையாடா நிற்ப, மை தீட்டிய கண்கள் கீழும் மேலு மாய்ச் சுழலுதல், சிவந்தமுகமாகிய தாமரை மலரி லிருக்கும் வண்டினங்களும், அழகிய கைகளாகிய காந்தள் மலர்களிலிருக்கும் வண்டினங்களும் ஒலித்து மேலெழுந்து கலந்து தழுவி விரும்புதலை யொத்திருக்கின்றதும், அழகிய வீதிகளையுடையதும், மதிலாற் சூழப்பட்டதுமாகிய திருவாரூர் என்னும் தலைமையினையுடைய பெரிய நகரின்கண்ணே எழுந் தருளியிருக்கின்ற நெற்றிக்கண்ணையுடைய கடவுள், ஆமையினது ஓட்டினைப் பதக்கமாக அணிந்து, தலை யோட்டினைக் கையில் ஏந்தி, அழகிய தாருகவனத்து இருடி பத்தினியர் வீடுகடோறும் சென்று பிச்சை யேற்று உண்டாலும் உண்ணும்; பசிய துளசிமாலை யணிந்த மேக நிறமுடைய திருமாலும் வேதங்களை யோதும் பிரமதேவரும் இந்திராதியரும் ஒலிக்கின்ற வீரக்கழலை வணங்கி எதிர்நிற்ப, அத்தேவர்களது பதவிகளை அவர்தம் வினைக்கேற்ப நீக்கியும், கொடுத்தும், தம்மை எதிர்த்தோரை அழித்துத் தம்மைச் சரணமடைந்தோரை ஆதரித்தும், போற்றுவோர் போற்ற, வணங்குவோர் வணங்க, அரசு வீற்றிருந்து அரசாட்சி செய்தாலும் செய்யும்; இன்னும் கூறின், யோகிகளது அடையாளங்கள் போகிகட்கு விதிக்கப் படாதிருப்பினும் சிவந்த சடையை விரித்து வெள்ளிய பூதியைப் பூசி, எருக்கமாலையுந் தரித்துக் காதலாலே, இடப்பாக மமைந்த உமாதேவியார் ஒரு கணப்பொழுது தம்மை நீங்கினும் பொறுது மடலேறுவனெனும்

உறுதிக் குறிப்பு விளங்க ஆற்ருேதை காம மேலோங்க ஏக்கமுற்று இரங்கி தேவியாரது தாமரை போலும் சிறிய திருவடியை வருடி ஊடல் கொள்ளுமிடத்து வருந்தியும், கூடலில் இன்பமுற்றும், போகங்களை அனுபவித்திருப்பினும் இருக்கும்; யோகிகட்கு அடைய வரியதாம் சிறந்த உண்மைப்பொருள் கிடைக்கும் பொருட்டுச் சின்முத்திரை காட்டி மௌன நிலையோடு யோகஞ் செய்துகொண்டிருப்பினு மிருக்கும்; இவ்வாறு அக்கடவுள் கற்பனையைக் கடந்த பொருளாக' விருத்த லின் அவர் மேற்கொண்டிருக்கும் நிலை இன்ன தன்மை யதாமென்று அளவுபடுத்திக் கூறலொண்ணுது.

25. இனிய நீர் சூழ்ந்த உலகத்திலுள்ள உயிர்கட் கெல்லாம் 'யாம் இனிய உயிராய் இருக்கிரேம்' என் றுணர்த்தும் நல்ல நீர்மையுடைய வயல்கள் சூழ்ந்த திருவாரூர்த் தியாகேசரது அழகு நிறைந்த திருவடிக்கு அடிமைப்பட்டவர் சிலரே யாவர். பிதுரர்கள் தலைவ ஞகிய இயமனது தண்டனைக்கு அவர்கள் நடுங்கி உள்ளாகமாட்டார்கள்.

26. குலையிலே பொருந்திய செவ்விளநீரானது குளிர்ந்த பூஞ்சோலையாகிய பெண்ணுக்கு இன்பம்தரும் முலையாகவைத்ததை ஒத்து அழகுசெய்யும் சிறப்புடைய திருவாரூரில் விளங்கும், தலைமாலையணிந்த தியாகேசரது சடை சிரித்தலைச்செய்யும் வெள்ளிய தலைபோலச் சித்தரித்த மண்ணோடு வைக்கப்பட்ட தினைப்புனத்தினை யொக்கும். அச்சடையிலுள்ள கங்காதேவி அத்தண்ணிய புனத்தில் காவலென வைக்கப்பட்ட வேடப்பெண்ணை யொப்பள். அச்சடையில் நீண்டு வளைந்த பிறை அவ் வேடர்மாதர் பறவைகளை ஓட்டக் கைக்கொண் டிருக்கும் கவணையொத்து விளங்கும்.

27. சந்திரன்மேலுயர ஓடுகின்ற நீரையுடைய கங்கை யாற்றின் பெருவெள்ளத்தைத் தடுத்தற்குப் பெரிய அணைபோலும் கட்டிவிடப்பட்ட வைக்கோற்புரி

யென்று யாவரும் சொல்லும்படியாக, விடங் கக்கும் படத்தையுடைய அரவம் ஊர்ந்து செல்லும்சடையையும், நெற்றிக் கண்ணையுமுடைய சிவபெருமான் திருக்கோயில் கொண்டருளிய திருவாரூரில் இளமை தங்கிய இலக்குமியை யொத்து விளங்குபவர்களே! தேன் ஒழுகுகின்ற மலர்களையுடைய சோலையை எனக்குக் குத்தகையாகக் கொடுத்தீர்; நான் இரண்டு மாவடுவைத் தேடியுங் காணேன். நிறைந்த இனிய நீர் ஒழுகும் இளநீரையும் கண்டேனில்லை. ஆகவே நீர் செய்த செய்கையை யான் என்னவென்று மொழிவேன்.

(இப்பாட்டு அகப்பொருட்சுவை நிரம்பியது. புறங்காட்டல் என்னுந் துறையிலேனும், கண் புதைக்கவருந்தல் என்னுந்துறையிலேனும் அமைத்துப் பொருள் கோடற்குரியதாம். பள்ளியிடத்துத் தலைமகனைக் கண்ட தலைமகள் புறங்காட்ட, அவளது கூந்தலை மாத்திரம் கண்டேன் என்றும், அவளது கண்களையும் தனங்களையும் கண்டேனில்லை என்றும் கூறிய முறையில் தலைமகன் கூற்றாகக் கருதலாம். அஃதன்றி, தலைமகனை எதிர்ப்பட்ட தலைமகள் வெட்கத்தினால் கரங்களிரண்டினாலும் மார்பினை யணைத்துக் கண்களைப் பொத்திக் கொண்ட காரணத்தால் தலைமகன் கண்களையும் தனங்களையும் காணவியலாது கூறிய கூற்றுமாகும்.)

28. மன்மதனது அவயவங்களின் மெல்லிய தசையாகிய மாமிசத்தை அக்கினிதேவனுடைய நாக்குச் சுவைக்கும்படி அழகிய நெற்றிக்கண்ணைத் திறந்தருளியவனே! நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்த மிருகண்டுய முனிக்கு மகனாராகிய மார்க்கண்டேய முனிவர் இறவாமல் என்றுமிருக்க, விடுதற்கரிய பாசக்கயிற்றுடனே உடலாகிய பாரம் நீங்கும்படி உயிர்களைக் கவரும் இயமனைத் திருவடியா லுதைத்தருளினவனே! கரியகடல் போலும் நிறமுடைய திருமால் திரிபுர தகன காலத்தில் வெள்ளிய இடபமதாகி திருவடிகளைத் தாங்கிய உதவிக்காக அவனது கங்காளத்தைச் சுமந்

தருளிய சூலப்படை யுடையோனே! தேவாசிரிய மண்டபத்தே பொருந்தியுள்ள தேவர் கூட்டங்கள், அத்தலத்துள்ளார் யாவரையும் உருத்திர கணங்களென்று எண்ணி ஓடிவந்து வணங்கி அருக்கியம், பாத்தியம், ஆசமனம் முதலியன மனமுவந்து அளிப்ப, அவர்கள் இத் **திருவாரூரிற் பிறந்தவர்கள் மறுமையில் நிலவுலகத்துப் பிறவார்கள்** என்பதை உறுதிப்படுத்த, சிவபெருமானுடைய திருக்கரத்தில் ஏந்திய கனலைக் கானுகின்ற மழுவையொத்த மழுவினைக் கைகளிற் றரித்துப் பெருமையோடு விளங்குகின்ற மேன்மை மிகுந்த கமலையெனும் திருவாரூரின்கண் விளங்குபவனே! எழுதப்படாது விளங்குகின்ற வேதம் நினது மொழி என்று சொல்லப்படுதலின் உனது பெருமையை நீயே கூறுதல் நிலைபெற்ற புலமையுடையதன்றாம். தேவர்களில் நின்னையொப்பார் இன்மையால் நினது நிலைமையை நீயே கூறாதுஒழிவாயாயின் அதனைத் தெளிபவர் எவருமிலர். தன்னைஅறியாதவரிடத்தில் தன்னுடைய வலிமையைப் புகழ்ந்து கூறும் சொற்களும் தகுதியாகும் என்று உன்னை நீயே புகழ்ந்து கூறியிருக்க, மயக்கத்தினீங்கிய காட்சிப் பொருளை நிச்சயித்துக் கூறாமல் விளங்காத் தன்மையினோடு இதற்கு இதுதான் காட்சிப் பொருளென்று மயங்கும்படிக் கூறுதல் பெருமையுடையதன்றாகும். ஆதலால் அளவிடப்படாத தெளிவுகாட்சிப் பொருளை வேதமானது சந்தேகமின்றி அறிவித்தலின் அவ்வேதம் தளராத நிலைமையையுடையது என்று மேலோர் கூறுவராதலின், செல்லும் வழியினின்றும் தவறினவன் அவ்வழியை அறியாமையாலுண்டான தன்னுடைய மயக்கத்தைத் தான்செல்லும் திசையின்மேல் வைத்து ஒருதிசை மற்றொரு திசையாக மாறிவிட்டதென்று சொல்லுவது போல, பேரறிவில்லாமையின் யாங்கள் முழுமையும் அறியாமல் பழைய வேதங்களும் மயங்கிய வென்று சொல்லுகின்றோம். ஆதலால் தலைவனே நினது நிலைமையானது எம்மால் அளந்தறிதலியலாது.

29. குழைந்த கரிய சேற்றினையுடைய அகன்ற வயல் சூழ்ந்த திருவாரூர்த் தியாகேசரது வெள்ளமாகிய கங்கை பாய்கின்ற சடையில் விளங்கும் வெள்ளிய பிறைச் சந்திரன், அன்னவடிவாய்ப் பறந்து சிவபெருமான் திருமுடியைக் காணாது நின்ற பிரமதேவரைப் பரிகசிப்பதுபோலும் சிரித்தலை, உலகவர் குளிர்ச்சி பொருந்திய நிலா என்று கூறுவர்.

30. பசுமை நிறமுள்ள திருமேனியுடைய திருமால் தனது சிவந்த கண்மலரை இடந்து அருச்சித்தும் காண்பதற்கு அரிதான இறைவரது திருவடித்தாமரையை, ஒப்பற்ற அருட்புலவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் பண்ணமைந்த திருப்பதிகங்களாகிய மலர்களை அணிந்து ஏவல்கொண்டவாறு என்னே! அதனால் குளிர்ச்சிபொருந்திய மலர்களையுடைய சோலைகளாற் சூழ்ந்த அழகிய திருவாரூர்த் **தியாகேசரது திருவடிகட்கு அணியப்படும் ஒள்ளியமலர்கள் தோத்திரமாகிய சொன் மலருக்கு ஒப்பாகா.**

31. மிகுந்தவளம் நிறைந்த புகழுடைய **தியாகேசரது திருவுருவமும்**, இடப்பாகத்தமைந்த கருநிறமுள்ள அழகுவாய்ந்த கூந்தலையுடைய **உமாதேவியாரது திருவுருவமும்**, இவ்விருவருக்கும் இடையே இன்பவுருவான கொல்லுந் தொழிலையுடைய கூர்மையான வேலாயுதமேந்திய இளமைதங்கிய **முருகக் கடவுளது திருவுருவமும்** ஆகிய இம்மூன்று திருவுருவங்களும் உருவமின்றிய வடிவாய் விளங்கும் குணங்களாய **சத்து, சித்து, ஆனந்தம்** என்னும் உண்மையறிவானந்தமாகிய மூன்றினது நன்மை பயக்கும் சோமாஸ்கந்த வடிவாகலின் தியாகேசர் எல்லா உலகுக்கும் மூல காரணர் என்று சொல்லப்படுகின்றனர்.

32. முத்து முதலிய ஒன்பது மணிகள் பதிக்கப் பெற்ற மதிலைச் சூழ்ந்து கிடக்கும் அகழியைப் பார்த்து பௌர்ணிமைக் காலத்துப் பெருகிய கடல் இஃதாகும் என்று நீரைக் குடிக்கும் பொருட்டு நெருங்கிய தொகுதி

யாய் வந்த பெரிய மேகங்களும், சிவந்த கண்ணையுடைய யானைகளும் ஒருங்குசென்று படிய, அஞ்சாமையுடைய படைவீரர் மேகம் ஈதென்றும் யானை ஈதென்றும் வேற்றுமை தெரியாதவராய், மேகமானது நீங்குதலால் இது எம்முடைய யானையாகுமென்று அதனை விலங்கிடுதற் பொருட்டு எதிரேசென்று பிடித்தலும், அம் மேகங்கள் காகங்கள் பந்தலிட்டதுபோல் மேலுயர்ந் தெழுந்து பாகனொடு திரிந்து படர்கின்ற காட்சியானது, நீண்ட வேலினையுடைய உக்கிரகுமார பாண்டியன் விலங்கினைப் பூட்டிக் கொண்டுவந்த மேகத்தினை யொக்கும் சிறப்பு நிரம்பிய திருவாரூர் நகரினையாளு பவரும், மேகந் திரண்டுள்ளது போன்ற விடம்நிறுத்திய கண்டத்தை யுடையவருமாகிய அண்ணலே! பிர மன், திருமால், உருத்திரன் என்று ஒருங்குசேர்த்து எண்ணும்படி முதன்மை வாய்ந்த படைத்தல் முதலிய தொழில்களை அப்பிரமதேவர், திருமால் மேற்கொண்டும் நினது ஏவலினால் தாங்கள் அவைகளைச் செய்யப் பெற் ரும் என்று எண்ணுராகி நீக்கரிய அகங்காரத்திற்கு இடமாக தமது அறிவுமுழுதும் கொடுத்துத் தமக்குரிய தெய்வ உடம்பைவிட்டுப் பறவையும் விலங்குமாகிய உடல்களைத் தாங்கிப் பலநாளும் தேடித்திரிந்தும் அடியும் முடியும் காணுதொழிந்த செய்கையிருக்க, அதற்கு நாணுமல் யாவரும் தம்மைப் பதியென்று கருதி வணங்க, அதனுல் கர்வமுற்றுத் தம்மைத்தாமே தேவர்களென்று மதித்திருக்கும் பிரமன் திருமாலாகிய இருவர் தவத்தைக் காட்டிலும், மார்க்கண்டேயரைப் போன்ற தொண்டரொடு பகைமைகொண்டு அதனுல் உன்னேடும் பகைமை பாராட்டிய பதகனுயிருப்பினும் தேவரீரது திருவடி தனக்கு நேரே வர, அதனைக் கண்டு அதனுல் உதைக்கப்பட்டு இறந்தானேனும் புகழ் பெற்று விளங்குகின்றமையால், அடியேனது இமையாத மூன்று நாட்டங்களையுடைய தந்தையாகிய தேவரீர் பொருட்டு அவ்வியமன் முன் செய்த நல்ல தவம் பெரிதாகும்.

33. நங்கையரே! கரும்பின் சுவைபோலும் இனிய சொற்களையுடைய இடது பாகத்து விளங்கும் உமா தேவியாரை இல்லக்கிழத்தியாகக் கொண்டுள்ள திருவாரூர்த்தியாகேசரது இன்பத்திற்கு விரும்பிநிற்கும் கரும்பு போல்வாளாகிய என்மகள், கரும்பை வில்லாக வுடைய மன்மதன் கையிலுள்ள கரும்பு வேம்பு போலக் கசக்கும் என்று கூறுவாள். முக்கண்ணுள்ள தியா கேசராகிய கரும்போ இனிமை பயக்கும் கரும்பு என்பாள்.

34. செந்நெற்பயிர்கள் கரும்பு எனும்படி விளையும் வயல்சூழ்ந்த திருவாரூர்த் தியாகேசர், வண்டுகள் பொருந்திய மேகம்போலும் கரிய கூந்தலையுடைய மலையரையன் மகளாகிய மயில்போலும் உமாதேவியார் இடப்பாகத்தே அமர்ந்ததுணிவினால், பார்ப்பவர்க்கு அச்சத்தை விளைக்கும் புற்றில் குடிகொண்டிருந்தார்; அஃதல்லாது சர்ப்பாபரணத்தையும் விருப்பமுற்று அணிந்தார்; கொடியவிடத்தையும் உண்டருளினார்.

35. மேகங்களைத் தங்கவொட்டாது அலைக்கும் உயரமுடைய சோலைகளை ஆடைபோலுடுத்து அழகு பெற்றுள்ள திருவாரூரில் எழுந்தருளிய தியாகேசரைக் கண்டபின் தன் தேகத்துப் படர்ந்த பசலையாகிய பொற்றேமலைப் பார்த்து 'எனக்குத் தமது கொன்றை மாலையைக் கொடுத்தார்' என்று எண்ணி உயிர் நிலைக்க நின்ற எனது மகள், தனது தோழிகளால் கொடுக்கப் படும் தேவாமிர்தத்தை யொத்த உணவாகிய அமுதத் தை "கரியவிடம் இஃதாகும்; ஆனாலும், நம்தலைவர் தாமுண்டது போக எஞ்சிய உணவோ" என்று உட் கொள்வாள். பின்னர் மனதில் "அத்தலைவர் என் மிச்சில் உணவை உண்ண விரும்புவர்" என்று நினைந்து உண்ட உணவை உட்செல்லா வண்ணம் தடுத்துப் புறத்தே யுமிழ்வாள்.

36. துளிக்கும்தேன் ஒழுகுகின்ற ஒள்ளிய பூங் கொத்துக்கள் அணிந்த கூந்தலேயும், அமுது ஒழுகு கின்ற மழலேயோடு கூடிய மெல்லிய இனிய சொற்களேயும், செவ்வரி பரந்த பெரிய கண்களேயும், மெல்லிய சாயலேயுமுடைய ஒரு பெண், வரிந்து கட்டப்பட்ட வில்லேத் தாங்கிய நீண்ட கையையுடைய ஒப்பற்ற தலேவனது அழகிய அகன்ற மார்பில் பொன்னுபரணங்கள் பிரகாசிக்க அம்மார்பில் அணிந்த ஆபரணத்தில் தோன்றும் தனது வடிவின் தோற்றத் தைப் பார்த்து, அவனது மார்பில் வேருெரு பெண் இருக்கின்ருள் எனக் கருதி, மனந்தரியாதாளாகிக் கோபங்கொண்டவளாய், "தவருத வாய்மொழியை யுடையவனே! நீ மிகவும் வாழ்வாயாக" என்று கூறி, பிணங்கினவளாய் எழுந்தனள். அதுகண்ட தலேமகன் கலங்கி அச்சமுற்று, தலேமகளது கண்மலரிரண்டும் கோபத்தால் சிவப்படைதலினுலும், உடலானது பொன் போலும் தேமலே யடைதலினுலும் இவளும் மயக்கம் பொருந்தும் தன்மையளோ என்று ஐயுற்றுப் பின்னர் உண்மையைத் தெளிந்து சிலம்பணிந்த அவளது பாதங்களே வருடி, வணங்கி, செம்பஞ்சுக்குழம்பினுல் விளங்கிய குஞ்சியனுகி வேண்டி நிற்க, தலேமகள் ஊடலால் கூடினவளுமல்லள், கூடாதவளுமல்லளாகித் தன்னுயகனிடத்து உண்டான மிக்க கோபமும் ஆசையும் தன்னே வருத்த, புறப்புணர்ச்சியினுலாகிய வெள்ளம் போன்ற ஆசையை மனத்துள்ளே யடக்கி, மனப் புணர்ச்சி மாத்திர முடையவளாய்த் தன்னுயகனேடு ஊடி நிற்கும் காட்சியானது மகரந்தங்கள் சொரிகின்ற பூமாலேயணிந்த **சாக்கிய நாயனுர், சிவபெருமானிடத்து உண்டான அன்பு மனத்துள்ளிருக்க, வெளிக்குப் பகைமை கொண்டவர்போலக் கல்லெறிந்து நிற்குந் தன்மையை ஒத்ததாகும்.** இங்ஙனம் மகளிர் தம் நாய கரோடு விளேயாடுதற் கமைந்த முத்துக்களால் அலங் கரிக்கப்பட்ட மாடங்களேயுடைய நீண்ட தெருக்கள் நெருங்கிய, கரியமேகங்கள் தவழாநின்ற அழகிய மதில்

சூழ்ந்த திருவாரூர்த் தியாகேசர் அரிய பெருமையை யாள்பவராயினும், மாமிசம் உண்ணும் வேடர்களுக்குத் தலைவராகிய கண்ணப்ப நாயனார், இரத்தம் தோய்தலால் சிவந்த வில்லைத் தாங்கிய கரியமேகத்தை ஒப்ப, பொன் முகலியாற்றில் படிந்து தன்வாயில் முகந்துவந்து உமிழ்ந்தநீரில் மனமகிழ்ந்து மூழ்கியும், விருப்பம் வேரூன்றி மென்று சுவைபார்த்த எச்சிலாகிய மாமிசத்தை யுண்டும், செருப்பணிந்த காலுதைக்குத் தேவரீர் இறு மாந்திருந்தும், நிலைத்த கீர்த்தியையுடைய அருச்சுனன் அடித்த வில்லடியைப் பொறுத்தும், அரிய தமிழுணர்ந்த அரிமர்த்தன பாண்டியன் அடித்த பிரம்படிக்கு உவந்தும், நள்ளிருள் யாமத்தில் நாவலர்கட்குத் தலைவராகிய சுந்தரமூர்த்திநாயனாருடைய நீங்காத காதலால் உண்டாகும் வருத்தத்தை யொழிக்குங் காரணமாக பரவையார் வாயிற்படியில் திருவடித் தாமரைகள் சிவக்க ஒருமுறையல்லாமல் இருமுறையாகத் தூதுசென்றும் எளியவர்களுள்ளும் மிக்க எளியராயினர். ஆகலான் தியாகேசர் தமது அன்பர்களுக்கு இரங்கும் இயல்பினர் போலும்.

37. திருவாரூர்த் தியாகேசரது சிவந்த திருமேனி யானது, தமது திருமேனியிற் பூசப்படும் வெள்ளிய விபூதியினாலும், குளிர்ந்த கருணையினாலும், கங்கை யாகிய மேலான நதியாகும்; அத்திருமேனியில் இடப் பாகம் அமர்ந்த உமாதேவி யமுனா நதியை யொப்பள். இவ்விருவருக்கும் இடையிலுள்ள செந்நிறமுள்ள முருகப்பெருமான் அந்நிறமுள்ள வாணிநதியைப் போல்வன். இங்ஙனம் இவ்வுருவம் முந்நதியுங் கூடிய சங்கமம் ஆதலால் நாம் எல்லோரும் சிறப்பாக இங்கு மூழ்கித் திளைப்போமாக.

38. தன்னையொப்பார் தாமே யாகும், செல்வவளம் பொருந்திய திருவாரூர்த் தலைவனாரது சிவந்த சடைக் காடு எதனையொத்து விளங்குமென்று எண்ணுமிடத்து

நெருப்பை யொக்கும்; அச்சடையிற் சூடிய கொன்றை மாலை அந்த நெருப்பில் காய்ச்சிய பொன்னையொத்து விளங்கும்; அக்கொன்றை மாலையில் மொய்த்துள்ள வண்டுகள் அப்பொன்னைச் சுடுமாறு இட்ட கரிகளை யொக்கும்; அச்சடையிற்றங்கிய கங்கை அக்கொன்றை யாகிய பொன்னால் பணிசெய்விக்கும்படி, பக்கத்திற் றங் கிய பெண்ணை யொப்பாள்; அச்சடையிற்றங்கிய வெள்ளிய பிறைச் சந்திரன் பொன்னைப் பணியாகச் செய்தற்குரிய கிழக்கொல்லனை யொத்து விளங்கும்.

39. வெள்ளிய நிலவை வீசும் சந்திரனை அணிந்த சிவந்த சடையாகிய கிரீடத்தை யுடையவரும், வீதி விடங்கரென்னும் திருநாமத்தையுடையவரும், திருவா ரூரில் எழுந்தருளிய நெற்றிக் கண்ணருமாகிய தியாகேசப் பெருமானது அழகிய புயமாகிய மலையிற்றங்கிய தன மலைகள் இரண்டாகும். அவற்றுள் பொன்மயமான மேருமலை அப்பெருமானது புயமலைக்குத் தோற்றுத் தளர்ந்து தலைவணங்கி நிற்கும். எமது அன்னையா ராகிய உமாதேவியாரது பருத்த அழகிய முலையாகிய பெரிய மலையானது தியாகேசரது புயமாகிய மலை குழையும்படி மோதுவதல்லது தான் வணங்கிடாது.

40. வண்டுகள் கொள்ளைகொண் டுண்ண நுண்ணிய துளிகளைக் கொப்பளித்து, குளிர்ச்சியுடைய தேனைத் துளிக்கின்ற பெரிய மலர்கள் பொருந்திய சோலையில் சீரிய குலைகள் சிந்தும்படி தேவர்களுக்குப் பழுத்த காய்களைத் தாங்கி நிற்கும் பசிய இளமைவாய்ந்த கமுக மரத்தில், புதராக விளையும் முல்லைக்கொடியானது பற்றி மேற்சென்று தலைவிரித்தாற்போல அம்மரத் தின் கிளைகடோறும் சுற்றிக்கொண்டு மீண்டும் கீழே விழுந்த வாசனை பொருந்திய பூங்கொத்துக்களையுடைய அம்முல்லைக்கொடிகள், நான்கு திசைகளினும் தொங்கு வனவாய் மடங்கி குலையையுடைய இளமைவாய்ந்த வாழை மரத்தில் பற்றிப் படராநிற்க, அந்தப் பசிய

குலைகளையுடைய கமுகி னுச்சியில் நின்று அடர்ந்த சிறகை விரித்து ஒப்பற்ற கண்கள்பொருந்திய தோகை யுடைய உவகைகொண்ட மயில் ஆடா நிற்ப, நீண்ட தாள்களையுடைய குரங்குகள் தமது உள்ளங்கையில் முள்ளைப் புறத்திலேயுள்ள பலாக்கனிகளைத் தூக்கிக் கொண்டு அக்கனிகளையடிக்க, இங்குமங்கும் சுழலும் இயல்புள்ள மற்றொரு குரங்கு பலாவின் இனிய பழத்தைப் பறித்தெடுத்து ஏந்தித் தலைமேற்கொண்டு சில குரங்குகள் அதனைப் பறிக்கப் பின்றொடர மயங்கி, வாழைக்கும் கமுகிற்கும் தொடரச் சுற்றிய அந்தப் பசிய பூங்கொத்துக்களையுடைய முல்லைக்கொடியில் அப்பழத்தோடு செல்லுங் காட்சியானது, நாற்றிசையி லும் கயிற்றை யிறுக்கிக் கட்டப்பட்ட நீண்ட பெரிய கம்பத்தினுச்சியில் நின்று தெய்வப்பெண்ணை யொத்த வளாகிய கழைக்கூத்தாடுவா ளொருத்தி விளையாட, பக்கத்து நிற்போர் பெரிய முழவை யெடுத்துக் கொட்ட, முதுகு வளைந்த கழைக்கூத்தன் குடத்தைத் தலையிற் சுமந்துகொண்டு கம்பத்தில் கட்டிய கயிற்றில் நடந்து செல்லும் தோற்றத்தை யொத்துக் காணப்படும் அழகிய வயல்கள் நிறைந்த மருதநிலத்தில் இனிய நீர் வளமுள்ள கமலையாகிய திருவாரூரை யாளுகின்ற அருள் வடிவாகிய தியாகேசப் பெருமான், செழுமை தங்கிய துளசிமாலை யணிந்த திருமால் தன் அன்பு என்னும் மந்தர மலையை ஆசையாகிய நாணால் கட்டிக் கடைந்து வருந்தும்படியாக கருணையாகிய பெரிய கடலிற்றோன்றி, அன்புடன் இந்திரன் வேண்டவும் தேவருலக மடைந்து, முடிவில்லாத செல்வத்தோடு அரசினையும் அவனடையுமாறு உதவிசெய்து, ஒப்பற்ற செங்கோல்செலுத்தி, பெரிய நிலவுலகத்தை யாளும்படி திக்குகடோறும் செலுத்தும் ஆணையாகிய சக்கரப் படையை யுடையவனாகிப் பொன்னுலகுக்குச் சென்ற முசுகுந்த அரசனுக்கு முன்னே தோன்றிக் காட்சி தந் தருளியதுபோலவே, அவன் வேண்டுகோட்கிரங்கித் தானிருக்குமிடமாகிய தெய்வலோகத்தை விட்டு நீங்கி

"உனது அரசாட்சிக்குரிய பூமியை யடைந்து நிலைபெற்ற உயிர்களுக்கு யாம் இனிய திருவருள் செய்வோம்" என்று அம்முசுகுந்தனுக்குக் கூறி, அவ்வாறே அவனுடன்வந்து இப்பூமியில் திருவாரூரில் அமர்ந்து பொருத்தமாக வேண்டியவர்க்கு வேண்டிய வரங்களை நிலைபெற அருளுவன். ஆதலால் நம்மவர்களே! நீங்கள் யாவரும் அத்தியாகேசப்பெருமானை வணங்கி உய்வீர் களாக.